விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 14 புதன்கிழமை (26.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 69

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவும் அபாயம்

உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று உலகம் முழுவதும் பரவும் ஆபத்து இருப்பதாகவும், உலக நாடுகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய சூழலில் இது உலகம் முழுதும் பரவும் நிலை இல்லை என்றா 23

நெடுந்தீவு பிரதேச சபை

## கூட்டமைப்பின் ஆளுகையிலிருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வசமானது

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த நெடுந்தீவுப் பிரதேச சபை நேற்றைய தினம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குள் வந்தது.

நெடுந்தீவுப் பிரதேச சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 06, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 04, ஐக்கிய தேசியக் கட்சி 01 மற்றும் சுயேட்சைக்குழு 02 என மொத்தம் 13 உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர். 23

புலத்தில் வாழும் தமிழர்களின் பெயர்களைத் தருக

# காணாமல்போனவர்கள் விபரம் வெளிப்படுத்தப்படும்

ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவிப்பு



*(கொழும்பு)* **யுத்தத்தின்போது இறந்தவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்த வேண்டுமெனில் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்களின் தகவல்களை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும் என்று ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கை இராணுவம், இறுதி யுத்தத்தின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக கூறப்பட்டே இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், இதற்கு எந்த சாட்சியும் கிடையாது.

அதேபோன்று, இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர் எனக் கூறப்படும் 23

2021ஆம் ஆண்டிலிருந்து

## முதலாம் தவணை பரீட்சைகள் இரத்து

கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் முதலாம் தவணை பரீட்சைகள் இடம்பெறாது என்று கல்வி அமைச்சின் சிறப்பு அறிக்கையொன்று வெளியாகியுள்ளது.

"அரச பாடசாலைகளில் முதலாம் தவணையில் இல்ல மெய்வல்லுநர் 23

ஐ.நாவிலிருந்து விலக

## புலிகளின் ஆதரவாளர்கள் தடை – செஹான்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புபட்டவர்களும் ஐக்கிய நாடுகளின் 30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய 23

இளம் யுவதியை கடத்த முயற்சி

## 4 பெண்கள் உட்பட 9 பேர் இராணுவத்தால் மடக்கிப் பிடிப்பு

வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

இளம் யுவதி ஒருவரை கடத்த முயற்சி செய்தபோது 4 பெண்கள் உட்பட 9 பேர் இராணுவத்தினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் வவுனியா ஓமந்தை பாடசா 23

## ஐ.நாவிலிருந்து விலகியதால் மக்களே பாதிப்படைவார்கள்

ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐ.நா பிரேரணையிலிருந்து விலகுவதென கோட்டா அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்தால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவர் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னபிரிய, 23

## அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குக

இன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுக்குமாறு 25 தொழிற்சங்கள் கூட்டாக அழைப்பு

07ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச நெருக்கடிகளுக்கு மகிந்த அரசே காரணம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்து 5 நாட்களுக்குள் நாட்டின் உள்ளக பிரச்சினையினை மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமே சர்வதேசத்திடம் கொண்டு சென்றது.

இதனை தேசத்துரோக செயற்பாடாகவே கருத வேண்டும் 23

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் என்ற பெயரில் பலர் போலியாக அரசியல் சாயம் பூசப்பட்டு களமிறக்கப்பட்டுள்ளனர்

● அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க இணைப்பாளர் ●

(அம்பாறை)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் என்ற பெயரில் பலர் போலியாக அரசியல் சாயம் பூசப்பட்டு களமிறக்கப்பட்டுள்ளனர். 10 வருடங்களாகியும் உறவுகளின் வருகையை எதிர்பார்த்து பல தாய்மார்கள் மரணித்துப் போன நிலையிலும் எமக்கான தீர்வு ஒன்று வழங்கப்படவில்லை என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க இணைப்பாளர் தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வாடி வீட்டு வீதியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் சங்கத்தின் மாவட்ட இணைப்பாளர் தம்பிராசா செல்வராணியின் தலைமை 23

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## மனமார்ந்த நன்றியினைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்



**மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர்**
**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

மயிலிட்டி துறைமுகப் பகுதியில் எமது சங்க அலுவலகம் இயங்குவதற்கு இடம் ஒதுக்கித் தந்தமைக்கு மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் கௌரவ **டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கு மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டு றவுச்சங்கம் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

(C-9337)

**மயிலிட்டித்துறை**
**கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**

## மரண அறிவித்தல்

மண்ணுலகில் 10 - 03 - 1940



விண்ணுலகில் 18 - 02 - 2020

### திருமதி இலட்சுமிப்பிள்ளை இராசதுரை

மாவிட்டபுரம் வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கு, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை இராசதுரை 18.02.2020 செவ்வாய்க்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராச துரையின் (துரைச்சாமி) அன்பு மனைவியும் மருதராஜா, மாதினி, மகாதேவி, மல்லிகா, மகாசக்தி, காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் மகாவிஷ்ணு ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29.02.2020 அன்று அவரின் இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(2384)

தகவல்:-
குடும்பத்தினர்

## விற்பனைக்கு

Toyoto Towance lotto (1995)
254 xx வான் விற்பனைக்குண்டு.
மாலை 3 மணிக்கு பின்
பார்வையிடலாம்
(2385)
**0769635621**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1977
உத்தரட்டாதி கிரகபாவம்: 17 1/4
உயரம் 5' 2" சொந்த தொழில் செய்யும்
மணமகனுக்கு மணமகள் தேவை.
குறிப்பு: தரகர் தேவையில்லை.
நேரடித் தொடர்பிற்கு
தொ.இல: **076 449 6275**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **அ.சிவசுப்பிரமணியம்**
அவர்களின் அன்புத்தாயார்
அமரர்
**பொன்னையா சேதுப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

**கல்லூரிச் சமூகம்.**
**யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**ச.தயாநந்தன்**
அவர்களின் அன்புத் தாயார்



அமரர்
**செல்லம்மா சங்கரப்பிள்ளை**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(C-9339)

**யா/கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதா வித்தியாசாலை**
**பாடசாலைச் சமூகம்**

## 1ம் ஆண்டு நினைவுநாள்



### அமரர் வசந்தகுலமணி ஸ்ரீலோகநாதன் (வசந்தா)

**திதி:- மாசி மாத பூர்வபக்ஷ திருதியை**
**26/02/2020**

அம்மா நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து
ஓர் ஆண்டு ஓடி மறைந்து விட்டது
மறப்போமா உங்கள் திருமுகத்தை
உங்களை நினைத்து கண்கள் கலங்குகின்றன
என்றும் உங்கள் நினைவாகவே வாழ்கின்றோம்.

இல.80 பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்
0772719000

கணவன்:- செ.ஸ்ரீலோகநாதன்
மகன்:- வித்தகன்

(2379)

## கடந்த கால குற்றங்களுக்கு
### முன்னாள் ஜனாதிபதி மைத்திரியே பொறுப்பு

இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க

(கொழும்பு)

கடந்த காலத்தில் நாட்டில் நடந்த அனைத்து குற்றங்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் எந்த விதத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டாலும் பொலநறுவை மக்கள் கட்டாயம் அவரை தோற்கடிக்கப்பார்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதிக்கு மீண்டும் எவருடைய ஆலோசனைகளும் அவசியமில்லை. தோல்வியான தலைவர்களின் ஆலோசனைகளை நாம் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்தார் (ம).

## ஷவேந்திர மீதான குற்றம்
### மொட்டு விளக்கம்

இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா மீதான் குற்றச்சாட்டுக்கள் சேறுபூசுவதற்காக சுமத்தப்பட்டவையென இராஜாங்க அமைச்சர் மஹிந்த யாப்பா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவுக்கு எதிராக முறையான விசாரணைகளை மேற்கொள்ளவோ, குற்றவாளியா? அல்லது நிரபராதியா? என விசாரணைகளின் ஊடாக கண்டறிவதற்காகவோ, அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அவருக்கு சேறு பூசும் வகையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.(ம)

### எழுவை - முருகமூர்த்தி மாணவர்களை ஊண்டோடு கத்தோலிக்கப் பாடசாலைக்கு மாற்றும்

# மத குருவின் செயலைத்துணிவுடன் வெளிக்கொணர்ந்த வலம்புரி மீதான அச்சுறுத்தல் மிலேச்சத்தனமானது

## இந்துமாமன்றம் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சிவபூமியாக பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே திரு மூலரால் அழைக்கப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்த மண்ணின் அமை தியைக் குலைத்து மேற்குலகின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உறு துணையாகச் செயற்பட்டு வரு கின்ற சில கத்தோலிக்க "மத" குருமாரின் செயற்பாடுகளை அகில இலங்கை இந்து மாமன் றம் வன்மையாகக் கண்டிக்கின் றது.


எழுவைதீவு முருகமூர்த்தி வித்தியாலய மாணவர்களை எழுவைதீவு றோமன் கத்தோ லிக்கப் பாடசாலைக்கு மாற்ற முயன்ற கத்தோலிக்க மதகுரு ஒரு வரின் செயல் தொடர்பில் மிகத் துணிவாக கடந்த 16 ஆம் திகதி அன்று வலம்புரி பத்திரிகை வெளிச்சத்துக்குக் கொண்டு வந் தது. அந்த உண்மையைப் பொறுத்துக்கொள்ள இயலாத அந்த "மத"குரு, பத்திரிகை அலு வலகத்தற்கு கூலிப்படை பாணி யில் ஓர் சிறியரக பேருந்தில் அடியாட்களை ஏவிவிட்டு அச் சுறுத்தியது மிகவும் இழி செயல் என்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இன ரீதியான பாகுபாடுகளை முறியடித்து சமத்துவத்துடன் வாழ வேண்டியது பற்றி முடி வெடுக்க வேண்டிய தருணத்தில் மதரீதியான பிணக்குகளை உரு வாக்கி அதில் இலாபமடைந்து குளிர்காயும் எண்ணத்தை விடு த்து பல்லின சமுதாயமாக வாழ அனைவரும் ஒத்துழைக்க வேண் டும் எனக் கேட்டுக் கொள்கின றோம் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் வெ. கந்தசாமி விடுத் துள்ளகண்டன அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நாங்கள் கிழக்குடன் பிரிந்து நிற்கவில்லை

# கட்டாயம் களம் இறங்குவோம்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் உறுதி



**(யாழ்ப்பாணம்)**

**நாங்கள் கிழக்குடன் பிரிந்து நிற்க வில்லை. கிழக்கு எமது ஒரு அங்கம், கட்டாயம் கிழக்கிலும் நாங்கள் களம் இறங்குவோம். கிழக்கிலையேல் தமிழர் தாயகம் இல்லாமல் போய்விடும் என வடமாகாண முன்னாள் முதலமைச்சர், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் உறுதிபடத் தெரிவித்தார்.**

கேள்வி: - முதலில் எம்மை மன்னிக்க வேண்டும். தெரியா மல் தான் இக்கேள்வி கேட்கி றோம். தாங்கள் வடமாகாணத் தில் ஸ்தாபித்த கட்சியில் கிழக்கு மாகாணம் அடங்கவில்லை. வடக்கு, கிழக்கு வேறா. நாம் யாவரும் (தமிழ், முஸ்லிம்) ஒன்றே. வடக்கு, கிழக்கு ஏன் பிரிந்துநிற்க வேண்டும்.-

ஏ.எச். வேலாயுதம்

பதில்:- கிழக்கு மாகாண பிரதிநிதிகள் எம் கட்சியில் அடங்குகின்றார்கள். உதாரணத் திற்கு மட்டக்களப்பைச் சேர்ந்த சோமசுந்தரம் எமது மிக முக்கிய மத்திய குழு உறுப்பினர். நான் மட்டக்களப்பு வந்து மக்களைச் சந்தித்துள்ளேன். அவர்கள் பிரச் சினைகளை கேட்டறிந்துள் ளேன். கல்முனையில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்தி ருக்கும் தரம் உயர்த்துதல் பற்றி யும் பேசிவந்துள்ளேன். நாங்கள் கிழக்குடன் பிரிந்து நிற்கவில்லை. கிழக்கு எமது ஒரு அங்கம். ஆனால் இதுவரை எமது தமிழ் மக்கள் கூட்டணியின் அடிமட்ட அல குகள் போதியவாறு நிறுவனப்படுத் தப்படவில்லை. எனவே எமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி யின் அங்கத்துவக் கட்சிகளின் பின்னல் வலையமைப்பை கிழக் கில் பாவிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். கட்டாயம் கிழக் கிலும் நாங்கள் களம் இறங்கு வோம் அல்லது தகுந்த பொருத்த மான கட்சிகளுடன் அல்லது மக்கள் தலைவர்களுடன் கூட்டுச் சேர்ந்து அவர்களை ஆதரிப் போம். எமது பிரச்சினை நேர மின்மையே. ஆனால் படிப்படி யாக எங்கள் பிரசன்னம் கிழக் கிலும் இடம்பெறும். கிழக்கில் லையேல் தமிழர் தாயகம் இல் லாமல் போய்விடும். உங்கள் கேள்விக்குநன்றி என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 12 குற்றச்சாட்டு 4 வர்த்தகர்களுக்கு 36 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக உணவு விற்பனை மற்றும் விநியோகத்தில் ஈடுபட்ட நான்கு வர்த்தகர்களுக்கு பருத் தித்துறை நீதவான் நீதிமன்றில் 36 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

தனிநபர்சுகாதாரம்பேணாமை, மருத்துவச் சான்றுப் பத்திரம் இன்றி உணவு கையாண்டமை, சூடான உணவுப் பொருட்களை பொலித்தீனுடன் தொடர்பில் வைத்தமை, ஈ, தூசினால் மாசு படக்கூடியவாறு சமையலறையி னைப் பேணியமை மற்றும் நேரடி வெயிலில் தாக்கமுறக் கூடியவாறு பிளாஸ்ரிக் கொள் கலன்களில் அடைக்கப்பட்ட மென்பானங்களை விநியோ கிக்க கொண்டு சென்றமை உட் பட 12 குற்றச்சாட்டுக்களுக்காக நான்கு வர்த்தகர்களுக்கெதிராக பருத்தித்துறை பிரிவு II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜெ சன் றொனால்ட்டினால் நீதிமன் றில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை வழக்குத் தாக்கல் செய யப்பட்டது.

குற்றங்களை வர்த்தகர்கள் ஒப்புக்கொண்டதன் அடிப்படை யில் குறித்த அபராதம் விதிக்கப் பட்டது. (இ-10)

# திருடர்கள் இல்லாத பாராளுமன்றத்தை உருவாக்க விருப்பு வாக்கை ஒழுங்காகப் பயன்படுத்துங்கள்

## மக்களுக்கு மனோ கணேசன் அறிவுரை

(கொழும்பு)

அடுத்த பாராளுமன்றம் திரு டர்கள் இல்லாத பாராளுமன்ற மாக இருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எல்லா தரப்பி லும் இப்படித்தான் இருக்க வேண் டும். ஆனால், கட்சி தலைவர்க ளுக்கு, கட்சிகளுக்கு சிலவேளை "கள்வர்கள்" என அறியப்பட்டவர் களுக்கும் வேட்பாளர் நியமனம் வழங்க வேண்டிய நிலை வரும். நடைமுறைச் சிக்கல்கள் கார ணமாக இது தவிர்க்க முடியா தது.

ஆகவே "திருடர்" இல்லாத பாராளுமன்றம் உருவாவது மக் கள் கைகளில்தான் உள்ளது. கொள்கை அடிப்படையில் நீங் கள் விரும்பும் கட்சி சின்னத்துக்கு வாக்களியுங்கள். ஆனால், உங் கள் விருப்பு வாக்கை "திருடர் களுக்கு எதிராக" வழங்குங்கள்.

யார் நல்லவர், வல்லவர் என அறிந்து, அந்த நல்ல, வல்ல வர்களுக்கு மட்டுமே விருப்பு வாக்கை வழங்குங்கள்.

சிங்கள வாக்காளர்கள் மத்தி யில் இன்று இந்தச் சிந்தனை வேகமாக ஒரு இயக்கமாகவே பரவி வருகிறது. தமிழ் மக்கள் மத்தியிலும் இந்தச் சிந்தனை எழுச்சி பெற வேண்டும் என முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தி னம் இடம்பெற்ற ஊடகச் சந்திப் பில் அவர் மேலும் தெரிவிக்கை யில்,

எதிர்வரும் தேர்தலில் வாக் காளர்கள் விருப்பு வாக்கை கவ னமாக வழங்க வேண்டும் எனக் கோர விரும்புகின்றேன்.

அதாவது "மக்கள் வரிப்ப ணத்தை தம் நண்பர்களுடன் சேர்ந்து திட்டமிட்டு திருடாத", "வெளிநாட்டு முதலீட்டாளர்களை நிர்ப்பந்தித்து கமிசன் பெறாத", "மதுசாலை பர்மிட் இல்லாத", "எதனோல் வர்த்தகம் செய்யாத" வேட்பாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு மாத்திரம் தமது விருப்பு வாக்கை மக்கள் வழங்க வேண்டும். அதே போல், "சபையில் பண்புடன் நடந்துகொள்கின்ற", "துணிச்ச லுடன் நியாயத்திற்காக குரல் கொடுக்கின்ற", "விசேடமாக தாய்மார்களையும், குழந்தை களையும், இளைஞர்களையும் நேசிக்கின்ற", "எதிர்காலம் பற்றிய தூரப்பார்வை கொண்ட", "மூன்று மொழிகள் முடியாவிட்டால் குறை ந்த பட்சம் இரண்டு தேசிய மொழி களையாவது பேசிஉண்மை இலங் கையராக தம்மை அடையாளம் காட்டுகின்ற" வேட்பாளர்களுக்கு மாத்திரம் உங்கள் விருப்பு வாக்குகளை வழங்குங்கள்.

இந்த விருப்பு வாக்கு புரட்சி மூலம் அடுத்த ஒன்பதாவது பாரா ளுமன்றம், "திருடர்கள் இல்லாத" பாராளுமன்றமாக அமையட்டும் என நான் பிரார்த்திக்கின்றேன். கட்சி, சின்னம் ஆகியவை உங் களுக்கு பிடித்தமானவையாக இருந்தாலும் கூட நடைமுறை அரசியல் காரணங்களுக்காக பிழையான நபர்களுக்கு, வேட் பாளர் நியமனங்களை அழுத்தம் காரணமாக கட்சிகள், கட்சித் தலைவர்கள் வழங்கி விடுகி றார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஆகவே கட்சியை, சின்



னத்தை மட்டும் பார்த்து, பிழை யான நபர்களுக்கு விருப்பு வாக் குகளை வழங்கி விட்டு, பின் அப்படியானவர்கள் இருக்கும் பாராளுமன்றத்தை கண்டு பாரா ளுமன்ற உறுப்பினர்கள் அனை வரும் திருடர்கள்.

225 பேரும் ஒழிய, அழிய வேண்டும் என சாபம் போடு வதில் பயனில்லை. நல்லவர் களைத் தெரிவு செய்யத் தான் விருப்பு வாக்கு என்று ஒன்று இருப்பதை மனதில் கொள்ளு ங்கள். இப்படி திடமனத்துடன் சிந்தித்து விருப்பு வாக்கை பயன் படுத்தமுடியாவிட்டால், என்னை போன்றவர்களுக்கு விடை கொடு ங்கள். சபைக்கு சென்று "திருடர் களுடன்" குடும்பம் நடத்த இனி யும் எனக்கு முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோலி சொதப்பியதே தோல்விக்கு காரணம் -சஞ்சய் மஞ்சேக்கர் பாய்ச்சல்

இந்தியா-நியூசிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நடந்தது. இதில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் படுதோல்வியை சந்தித்தது.

இந்த தோல்விக்கு இந்திய வீரர்களின் பேட்டிங்கே காரணமாக அமைந்தது. மயங் அகர்வால், ரகானேவைத் தவிர மற்ற வீரர்கள் பொறுப்புடன் விளையாடவில்லை. இதனால் மோசமான தோல்வியை இந்தியா சந்தித்தது.

இந்த நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் தோற்றதற்கு இந்திய கேப்டன் விராட் கோலி பேட்டிங்கில் சொதப்பியதே முக்கிய காரணம் என்று இந்திய முன்னாள் வீரரும், வர்ண னையாளருமான சஞ்சய் மஞ்சேக்கர் கூறியுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்டில் கேப்டன் விராட் கோலி இரு இன்னிங்ஸிலும் விரைவில் அவுட் ஆனதே தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது. கோலி ரன்களை குவித்து இருந்தால், அது எதிரணியால் திட்டங்களை செயல்படுத்த முடியாமல் போயிருக்கும். நியூசிலாந்து அணி வீரர்கள் தங்களது திட்டங்களை செயல்படுத்த முடியாமல் திணறி இருப்பார்கள்.


ஆனால் யாரும் எதிர் தாக்குதல் நடத்தி போராடவில்லை. இந்த காரணங்களால் இந்திய அணி தோல்வியை சந்தித்தது. இவ்வாறு அவர் கூறினார். கோலி முதல்-இன்னிங்சில் 2 ரன்னிலும் இரண்டாவது இன்னிங்சில் 19 ரன்னிலும் அவுட் ஆனார்.

நேற்று முன்தினம் போட்டி முடிந்த பிறகு கோலி கூறும்போது, நான் நல்ல நிலையில் இருக்கிறேன். எனது பேட்டிங் நன்றாக இருக்கிறது. ரன் குவிக்காததால் எனது பேட்டிங் திறன் பாதிக்கப்படவில்லை. சில சமயங்களில் பேட்டிங்குக்கு தகுந்த மாதிரி ஸ்கோர் அமையாமல் போவது உண்டு.

விமர்சகர்கள் எங்கள் மன நிலையை மாற்ற முயற்சிக்கிறார்கள். ஆனால், அது நடக்காது. ஒரு தோல்வியால் எங்களது தன்னம்பிக்கை சிதைந்துவிடாது என்று கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சச்சினை 'சூச்-சின்' என உச்சரித்த டிரம்ப்: கிரிக்கெட் வீரர்களின் ரியாக்சன்





மொரேடா மைதானத்தில் நேற்று நடைபெற்ற நமஸ்தே டிரம்ப் நிகழ்ச்சியின்போது சச்சின் தண்டுல்கர் பெயரை டொனால் டிரம்ப் தவறாக உச்சரித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால் டிரம்ப் இரண்டு நாள் சுற்றுப் பயணமாக இந்தியா வந்துள்ளார். நேற்று முன்தினம் உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமாக கட்டப்பட்டுள்ள மொடேரா மைதானத்திற்குச் சென்றார். அங்கு பேசும்போது இந்த நாடு (இந்தியா) தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களான சூச்-சின் தண்டுல்-கர் மற்றும் விராட் கோலி ஆகியோரை கொடுத்துள்ளது" என்றார்.

இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவானாக திகழ்ந்த சச்சின் தண்டுல்கர் உலக அளவில் பிரபலமானவர். இவர் பெயரை டிரம்ப் தவறாக உச்சரித்திருப்பது விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகு நித்து டுவிட்டர்வாசிகள் பல்வேறு கருத்துக்களை எழுதி வருகின்றனர்.

டிரம்ப் சூச்-சின் தண்டுல்-கெர் என்க் கூறிய நிலையில் இங்கிலாந்து முன்னாள் பேட்ஸ்மேன் கெவின் பீட்டர்சன் டுவிட்டரில் "குகுளு, PiersMorgan, தயது செய்து உங்களை சேர்ந்தவர்களுடன் லெஜண்ட் பெயரை எப்படி உச்சரிப்பது என்று கேளுங்கள்" என்று பதிவிட்டுள்ளார்.

மைக்கேல் வாகன் தனது டுவிட்டர் பக்கத்தில் "இன்று எப்படி இருக்கிறீர்கள் சூச்-சின்" என்று பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையில் நீயூசிலாந்து வீரர் ஜிம்மி நீசம் "இதற்கு முன் சில பெயர்களை அறியாதவர்கள் தவறாக உச்சரித்தால் ஏன் வெறுக்கும் அளவில் பேசுகிறீர்கள்?" என்று பதிவிட்டுள்ளார்.

# சிம்பாவே அணிக்கெதிரான டெஸ்டில் பங்களாதேஷ் அபார வெற்றி




சிம்பாப்வே அணிக்கெதிரான ஒரேயொரு டெஸ்ட் போட்டியில், பங்களாதேஷ் அணி இன்னிங்ஸ் மற்றும் 106 ஓட்ட ங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

டாக்கா மைதானத்தில் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சிம் பாப்வே அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சிம்பாப்வே அணி, முதல் இன்னிங்ஸிற்காக 265 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கிரைஜ் எர்வீன் 107 ஓட்டங்களையும், பிரின்ஸ் மஸ்வாரே 64 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், அபு ஜெயிட் மற்றும் நயீம் ஹசன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், தைஜுல் இஸ்லாம் 2 விக் கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 560 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, முஷ்பிகுர் ரஹீம் ஆட்டமிழக்காது 203 ஓட்டங்களையும், மொமினுல் ஹக் 132 ஓட்டங்களையும், நஜ்முல் ஹொசைன் 71 ஓட்டங்களையும், லிடொன் தாஸ் 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில், ஜன்ஸ்லி என்ட்லோவ் 2 விக் கெட்டுகளையும், டொனால்ட் ரிபானோ, விக்டர் நியாச்சி, ஷிகண்டர் ரஸா, சார் ல்டன் /மா ஆகியோர் தலா 1 விக் கெட்டினையும் வீழ்த்தினர்.


இதனையடுத்து, 295 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய சிம்பாப்வே அணி, 189 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பங்களாதேஷ் அணி இன்னிங்ஸ் மற்றும் 106 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கிரைஜ் எர்வீன் 43 ஓட்டங்களையும், டிமிசென் மருமா 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், நயீம் ஹசன் 5 விக்கெட்டுகளையும், தைஜுல் இஸ்லாம் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 318 பந்துகளில் 28 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 203 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட முஷ்பிகுர் ரஹீம் தெரிவு செய்யப்பட்டார்.

# விராட் கோலி ரோகித் சர்மா விக்கெட்டுதான் குறி: டாம் குர்ரான்



விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா விக்கெட்டுதான் குறி என ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக விளையாட இருக்கும் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டாம் கர்ரன் தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் 2020 சீசன் அடுத்த மாதம் தொடங்குகிறது. ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் இங்கிலாந்து அணியைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சு ஆல்-ரவுண்டர் டாம் கர்ரன் இடம் பிடித்துள்ளார்.

இவர் தென்ஆபிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரில் விளையாடினார். 2-வது போட்டியில் இங்கிலாந்து இரண்டு ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற முக்கிய காரணமாக இருந்தார். கடைசி ஓவரை வீசிசிறப்பாக கட்டுப்படுத்தினார்.

இவர் ஐபிஎல் தொடரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஐபிஎல் போட்டி யின் போது விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா ஆகியோரின் விக்கெட்டை வீழ்த்துவதே குறி என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டாம் கர்ரன் கூறுகையில் "ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி ஆகியோரின் உலகின் தலைசிறந்த வீரர்கள் என்று நினைக்கிறேன். ஆனால் பந்து வீச்சாளர்கள் அவர்களின் திட்டத்தை சரியான வகையில் செயல் படுத்துவதைத்தான் எதிர்நோக்குவார்கள்.

அதனால் நான் அவர்களை விட என்னுடைய திறமையைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இது மிகப் பெரிய சவாலாக இருக்கும். அதை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

## தென்மராட்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு தாராளம்

# வரம்பைக் கூட விட்டு வைக்காத கொள்ளையர்கள்

## தகவல் வழங்கினால் போட்டுக்கொடுக்கும் பொலிஸார்

## பொதுமக்கள் சரமாரி குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச மக்கள் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாருக்கு எதிராக அதிக குற்றச்சாட்டுக்களை முன்வைத் தனர். நேற்று முன்தினம் திங்கட் கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பிர தேச மட்ட அபிவிருத்தி தேவைப் பாடுகள் தொடர்பான கலந்துரை யாடலின் போதே மக்கள், பொலி ஸார் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இது தொடர்பாக கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கையில், நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம உத்தி யோகத்தர் பிரிவில் அரச காணி களுக்குள் மண் அகழ்வு இடம் பெறுகின்றது. வயல் நிலங்கள் ஊடாக மண் கடத்தப்படுகிறது. இதனால் வயல் நிலங்கள் வெகு வாகப் பாதிப்படைகின்றன.

இது தொடர்பாக பொலிஸாரு க்குத் தகவல் வழங்கி பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருவதற்கு கால தாமதமாகின்றது. பொலி ஸார் வருவதற்கு இடையில் மண் கடத்தல்காரர்கள் தப்பித்து விடுகின்றனர்.

அத்துடன் மட்டுவில் வடக்கு ஜே/313 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் சட்டவிரோத மண் அகழ்வு தாராளமாக இடம்பெறு வதாக மக்கள் சுட்டிக்காட்டியிரு ந்தனர். இதன்போது மணற் கொள்ளையர்கள் தோட்டத்தி ற்கும் வயலுக்கும் இடையே உள்ள வரம்பைக் கூட வெட்டி அகழ்ந்து செல்வதாகவும் பொது மக்கள் வேதனைப்பட்டனர்.

இது தொடர்பாக பொலிஸாரு க்கு தகவல் வழங்கினால் பொலி ஸார் தமது தொலைபேசி இலக்க த்தை மணற் கொள்ளையர்க ளிடம் வழங்கி அவர்கள் தம்மை அச்சுறுத்துவதாகவும் தெரிவித்தி ருந்தனர்.

மேலும் கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தவசிக்குளம் கிராமத்தில் கசிப்பு விற்பனை மற்றும் வீட்டில் வைத்து மது பானம் விற்றல் போன்ற சட்ட விரோத செயற்பாடுகள் அதிகம் இடம்பெறுவதாகவும் அப்பகுதி கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஊருக்குள் வைத்து மதுபா னம் மற்றும் கசிப்பு விற்பனை இடம்பெறுவதனால் இரவு வேளை களில் பொதுமக்கள் நடமாட முடியாத நிலை காணப்படும் அதேவேளையில் பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுவ தாகவும் சுட்டிக்காட்டினர்.

மக்களின் குற்றச்சாட்டுக் ளுக்கு சாவகச்சேரி பொலிஸார் விளக்கமளிக்கையில், கடந்த காலங்களில் இடம்பெற்ற மண் அகழ்வுகள் தற்போது ஓரளவிற்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளன.

எம்மால் 100 வீதம் சட்ட விரோத மணல் கடத்தல்களைப் பிடிக்க முடியாது. காரணம் அவர் கள் பொலிஸாரின் நடமாட் டத்தைக் கண்காணித்து மண் கடத்தலில் ஈடுபடுகின்றனர். இருப்பினும் சந்தேகத்திற்கு இட மானவர்களைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித் தனர்.

இது தொடர்பாக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலை வர் அங்கஜன் இராமநாதன் தெரிவிக்கையில், பொலிஸார் மீது மக்களுக்கு நம்பிக்கை வர வேண்டும். அந்த நம்பிக்கையை வர வைக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உண்டு.

பொலிஸ் மரியாதைக்கு உரிய தொழில். அந்த மரியாதையை பொலிஸார் தக்க வைத்துக்கொ ள்ள வேண்டும். அத்துடன் பொலி ஸார் தமது ஆளணிப் பற்றாக் குறை உள்ளிட்ட குறைபாடுகளை தமது பொலிஸ் தலைமையகத் திடம் கூறி குறைபாடுகளை நிவர் த்தி செய்து மக்களுக்குச் சிறப் பான சேவையாற்ற வேண்டும்.

அத்துடன் சட்டவிரோதச் செயற் பாடுகள் அதிகளவில் இடம்பெறு கின்ற கிராமங்களில் பொலிஸார் பொதுமக்களை இணைத்து குழு ஒன்றினை அமைத்து குற்றச் செயல்களைக் கட்டுக்குள் கொண் டுவர வேண்டும். உயிரைப் பணயம் வைத்து கடமையாற் றும் நீங்கள் மக்கள் மத்தியில் மதிப்பைப் பெறாது விட்டால் சேவையாற்றுவதில் அர்த்தமி ல்லை என அவர் மேலும் தெரி வித்தார். (இ-30)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இணுவில் காந்தசுவாமி கோவில் புதிய நிர்வாக சபைத் தெரிவு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கி ழமை பிற்பகல் 3 மணியள வில் ஆலய வளாகத்தில் இடம் பெறவுள்ளதால் குறித்த கூட்ட த்தில் வாக்களிக்கத் தகுதியு ள்ள உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்தன் அறிவித்துள் ளார். (இ-10)

## 4 இலட்சத்து 79 ஆயிரத்து 582 பேர்

# யாழ்.மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதி

## 4,408 பேர் புதிய வாக்காளர்கள்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் பத்துத் தொகு திகளில் 4 இலட்சத்து 79 ஆயிர த்து 582 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என யாழ். மாவட்ட தேர்தல்கள் திணைக் களப் புள்ளி விபரங்கள் தெரி விக்கின்றன.

கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்.மாவட்ட த்தில் உள்ள குறித்த தொகுதி களில் இருந்து 4 இலட்சத்து 75 ஆயிரத்து 176 பேர் வாக்களிக் கத் தகுதி பெற்ற நிலையில் இவ்வருடம் 4,408 பேர் புதிய வாக்காளர்களாக உள்வாங்கப்ப ட்டனர். (இ-10)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி - வரணி- மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு "கந்த னவன் அருட்கடாட்சம் பெற்று உய்ந்த அடியவர்கள் " என்னும் தலைப்பில் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வியாழக் கிழமை முதல் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மாலை 6.30 மணியள வில் சொற்பொழிவு இடம்பெற வுள்ளது. (இ)

# குப்பிழான் தெற்கில் மரக்கறிகள் திருட்டு



(குப்பிழான்)

குப்பிழான் தெற்கு காடா கடம்பை இந்து மயானத்திற்கு அருகில் அடுத்தடுத்து இரு விவ சாய நிலங்களில் உருளைக் கிழங்கு, பீட்ரூட் ஆகிய மரக்கறி வகைகள் திருடிச் செல்லப்பட்டு ள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்று.

மேற்படி பகுதியில் அறுவடை க்கு இன்னும் சில நாட்களே எஞ்சியிருந்த நிலையில் உரு ளைக்கிழங்குச் செய்கை நில த்தில் பயிரிடப்பட்டிருந்த பல பாத்தி உருளைக்கிழங்குகள் பிடுங்கப்பட்டு குறித்த பகுதியி லேயே வெட்டி எடுத்துச் செல்ல ப்பட்டுள்ளன.

சுமார் 300 கிலோ வரை யான உருளைக்கிழங்குகளே இவ்வாறு திருடிச் செல்லப் பட்டுள்ளதாக தோட்ட உரிமை யாளரான த.உதயகுமார் தெரி வித்தார்.

அதேபகுதியிலுள்ள விவசாய நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த சுமார் 150 கிலோ பீட்ரூட்டும் பிடுங்கி வெட்டி எடுத்துச் செல் லப்பட்டுள்ளன. நா.ஜெகதீசன் என்பவருக்குச் சொந்தமான பீட்ரூட்டே இவ்வாறு திருடிச் செல்லப்பட்டது.

தற்போது மரக்கறி வகைகள் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படும் நிலையில் குறித்த திருட்டு இடம்பெற்றிருப்பது விவ சாயத்தையே தமது வாழ்வாதா ரமாக நம்பியுள்ள தம்மைக் கடுமையாகப் பாதித்துள்ளதாக குறித்த விவசாயிகள் தெரிவித்த னர்.

இதேவேளை, அண்மைக் காலத்தில் குப்பிழான், ஏழாலைப் பகுதியில் இரவு வேளைகளில் தொடர் மரக்கறித் திருட்டுக்கள் நடந்துள்ளமை தொடர்பாக சுன் னாகம் பொலிஸாரின் கவனத்தி ற்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் பொலிஸார் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்க வில்லை எனச் சுட்டிக்காட்டிய பாதிக்கப்பட்ட விவசாயிகள் இதன் காரணமாக மேற்படி மரக்கறித் திருட்டுத் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்வதைத் தவிர்த்துள்ள தாகவும் தெரிவித்தனர். (இ-7)

## சஹ்ரானிடம் பயிற்சி இருவருக்குப்பிணை

### 62 பேருக்கு மறியல் நீடிப்பு

(ஹாவூர்)

ஐ.எஸ்.ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவ ர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்த 64 பேரில் இருவர் பிணையில் விடு விக்கப்பட்டதுடன் ஏனையவர் கள் தொடர்ந்தும் விளக்கமறிய லில் வைக்கப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தின குண் டுத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் சஹ் ரான் தலைமையிலான பயங்கர வாதிகள் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 64 பேர், சஹ்ரானுடைய அம்பாந்தோட்டை மற்றும் நுவ ரெலியா பயிற்சி முகாம்களில் அந்த அமைப்புடன் தொடர்புடை யவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட 64 பேரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி. அவர்கள் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இரு மாதங்களுக்கு முன்னர் 3 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் 62 பேர் விளக்கமறியலில் வைக் கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து வாரிய பொல பிரதேசத்தில் அண்மை யில் கைது செய்யப்பட்ட காத் தான்குடியைச் சேர்ந்த 3 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட் டிருந்த 61 பேருடன் சேர்த்து 64 பேரையும் நேற்று செவ்வாய்க் கிழமை நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அழை த்துச் சென்று, நீதவான் ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் பொலி ஸார் ஆஜர்படுத்தினர்.

இவர்களில் இருவர் பிணை யில் விடுவிக்கப்பட்டதுடன் ஏனை யவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார்.

ஆண் ஒருவரும் பெண் ஒரு வரும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அவர் களை ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகுமாறு உத்தரவிடப்ப ட்டது. (இ-7)

# உயிர்களைப் பாதுகாக்கக் கூடிய வேலைத்திட்டங்களுக்கே நான் முன்னுரிமையளிப்பேன்

## அங்கஜன் எம்.பி.உறுதி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் "நிறைவான கிராமம்" திட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் ஆரம்பமானது. இதன் பிரகாரம் செட்டியார்தோட்டம் குளத்திற்கான தடுப்பணை அமைத்தல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இக்குளத்திற்கு தடுப்பணையொன்று இல்லாமையால் ஏற்பட்ட பாதிப்புக்கள், உயிரிழப்புக்கள் தொடர்பில் அப்பகுதி மக்களாலும் கிராம உத்தியோகத்தராலும் கூறப்பட்டது. அத்துடன் நட்சத்திரப் பெண்கள் மகளிர் விவகாரக்குழுவால் மகஜர் ஒன்றும் அங்கஜன் எம்.பியிடம் கையளிக்கப்பட்டது.

குளத்தின் அருகிலுள்ள வீதியின் அகலம் குறைவாக காணப்படுவதும் அக்குளத்திற்கு தடுப்பணை ஒன்று இல்லாதது மக்களின் பீதிக்குக் காரணம் என பல தரப்பினரால் கூறப்பட்டது.

மழை காலங்களில் குளத்தின் அருகிலுள்ள வீதி நிரம்புவதாகவும் அதனாலும் மக்கள் குளத்தில் வீழ்வதாகவும் மக்கள் எடுத்துரைத்தனர். பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் இச் சூழலில் தாம் வாழ்வதாகவும் மக்கள் கூறினர்.

குளத்தின் மறுதிசையிலே தடுப்பணை கட்டுவதாக உத்தேசிக்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்த போதிலும் உயிர்களைப் பாதுகாக்கக்கூடிய வேலைத் திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற அங்கஜன் இராமநாதனின் நல்லெண்ணக்கருத்தின் நோக்கத்தோடு குளத்திற்கு அருகில் காணப்படும் பாதுகாப்பற்ற வீதிக்கு அருகாமையில் முன்னுரிமை அடிப்படையில் தடுப்பணைக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றினார்.

தொடர்ந்து அடுத்து வரும் திட்டங்களில் இவ் வீதிக்கான அபிவிருத்திப் பணிகளையும் குளத்துக்கான பூரண தடுப்பணையையும் அமைத்துத் தருவதாக உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுமக்கள், மாதர் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொ ண்டனர். (இ-10)

## நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு அபிவிருத்தி செயலணியின் மூலம் குறைந்த வருமானம் பெறும் ஒரு இலட்சம் பேருக்கு தொழில்வாய்ப்பினை வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு இன்று புதன்கிழமை 2020.02.26 தொடக்கம் வெள்ளிக்கிழமை 2020.02.28 வரையான 3 நாட்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. குறித்த நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள், தோற்ற வேண்டிய திகதி, நேரம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பான கடிதங்கள் அவர்களுக்குரிய கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## புத்திர பாக்கியம் தரும் அரச மரம்

அரச மரத்தை வழிபடும் வழக்கம் இந்துக்களிடையே பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. சிந்து சமவெளி நாகரிக காலத்திலேயே அரச மர வழிபாடு இருந்ததாக கருதப்படுகிறது. அரச மரத்தின் கீழ் அமர்ந்துதான் புத்தர் ஞானமடைந்ததாக கூறப்படுகிறது. எனவே அரச மரத்தை போதிமரம் எனவும் குறிப்பிடுவர். இந்துக்களும் பௌத்த மதத்தினரும் அரச மரத்தை புனிதமாக கருதுகின்றனர்.

மரங்களில் நான் அரசமரமாக இருக்கிறேன் என பகவத்கீதையில் கண்ணன் குறிப்பிடுகிறார். அரச மரத்தடியில் விஷ்ணு பகவான் பிறந்ததாகவும் அசுரர்களிடம் தேவர்கள் தோற்றுப்போன நேரத்தில் விஷ்ணு பகவான் அரச மரத்திற்குள் ஒளிந்திருந்ததாகவும் கிருஷ்ணர் அரச மரத்தடியில் இறந்ததாகவும் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச மரத்தை வெட்டுவது பிரம்ம ஹத்தி தோசத்திற்கு சமமானது என ஸ்கந்த புராணம் குறிப்பிடுகிறது. ஹோமங்களில் அரசமர குச்சிகளை சமிதாக பயன் படுத்துவர். ஹோமாதி காரியங்களைத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் அரச மரத்தை வெட்டக்கூடாது. குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் அரச மரத்தை குழந்தையாக பாவிக்க வேண்டும் என ஸ்கந்த புராணம் குறிப்பிடுகிறது.

ஜோதிடத்தில் குரு கிரகத்தை புத்திர காரகன் என குறிப்பிடுவர். பூசம் நட்சத்திரத்தில் உச்சமடையும் கிரகம் குருவாகும். பூசம் நட்சத்திரத்திற்குரிய விருட்சம் (மரம்) அரசமரமாகும். அதாவது அரச மரத்தில் குரு கிரகத்தின் ஆற்றல் அதிகபட்சமாக உள்ளது.

எனவே அரச மரத்தை பெண்கள் சுற்றி வந்தால் புத்திர பாக்கியம் உண் டாகும் என்பது வெறும் நம்பிக்கை மட்டும் அல்ல அது உண்மையே. அரச மரத்தை சுற்றுவதால் பெண்களின் கருப்பை சம்பந்தமான கோளாறுகள் நீங்குவதாக கூறப்படுகிறது.

நாம் சுவாசிக்கும் காற்றுக்கு பிராண வாயு என்று பெயர். பிராண வாயுவை அதிக பட்சமாக வெளியிடும் மரம் அரச மரமே. பிராண வாயு இல்லாமல் யாரும் உயிரோடு இருக்க முடியாது. நாடி ஜோதிடத்தில் குரு கிரகத்தை ஜீவகாரகன் என குறிப்பிடுவர். ஜீவன் என்றால் உயிர் என்று பொருள். அரசமரத்தை சுற்றும் போது பிராண வாயு அதிகளவில் கிடைப்பதால் உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ஆயுள் அதிகரிக்கும்.

ஜோதிடத்தில் குரு கிரகத்தை புண்ணியகாரகன் என குறிப்பிடுவர். குரு கிரகம் உச்சமடையும் அரச மரத்தை நட்டு வளர்த்து வந்தால் பல தலைமுறைகளுக்கு அந்த புண்ணியம் போய்சேரும். அரச மரத்தை வெட்டுபவன் தான் செய்த புண்ணியங்கள் அனைத்தையும் இழப்பான், அவன் சந்ததிகள் அழிந்து போகும்.

சூரிய சக்தியை அதிகளவில் சேமித்து வைக்கும் மரம் அரச மரமாகும். சூரிய னின் ஆற்றலும் குரு கிரகத்தின் ஆற்ற லும் ஒன்றிணைவதால்தான் உலகத்தில் உயிரினங்கள் தோன்றுவதாக அறிவியலா ளர் குறிப்பிடுகின்றனர். குரு, சூரிய சேர்க் கையை சிரஞ்சீவி யோகமென நாடி ஜோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன. குரு ஆற்றலும் சூரிய ஆற்றலும் ஒருங்கே நிரம்பி வழியும் மரம் அரசமரம்.

எனவே அது ஒரு ஜீவ விருட்சமாகும். அந்த ஜீவ விருட்சத்தை சுற்றுவதால் உடலில் ஜீவ ஆற்றல் அதிகரிக்கும். உடலில் ஜீவ ஆற்றல் அதிகமாக இருந்தால் மனம் தெளிவடையும். எண்ணியவை எல்லாம் எளிதில் நிறைவேறும். அரச மரத்தடியில் அமர்ந்துதியானம் செய்தால் தியானம் எளிதில் கைகூடும்.

# இராசி பலன்

**26.02.2020**

மாசி 14, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

திருதியை பின்னிரவு 3.17 மணிவரை

உத்தரட்டாதி முன்னிரவு 9.26மணிவரை

சுபநேரம் 4.59-6.29 மணிவரை

இராகுகாலம் 12.29-1.59 மணிவரை

சுபமுகூர்த்த தினம்

வீரமும் விவேகமும் மனிதனின் மாபெரும் பண்புகள்

**வளவன்**

கிரகநிலை: சுக் சந் / ராகு / சூரி / புத / சனி,செவ் குரு, கேது

சந்திராஷ்டமம்: மகம், பூரம்

**மீனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், திடீர் பயணத்தால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மேடம்:** தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், கொடுக்கல்- வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும், நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் கூடும்.

**கடகம்:** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், குடும்ப மகிழ்ச்சி கூடும்நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் தோன்றி மறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய் நாள்.

**தனுசு:** தொழில் சம்பந்தமாக அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், சுபமுயற்சிகள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்:** செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசனசுகமுண்டு.

# அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி இன்று சுகயீன விடுமுறையை அறிவித்து போராட்டம்

## 25 தொழிற்சங்கங்கள் கூட்டாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று 26 ஆம் திகதி புதன் கிழமை அனைத்து அதிபர்,ஆசிரியர்களும் சுகயீன விடுமுறையை அறிவித்து அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்க வலியுறுத்துவோம் என 25 தொழிற்சங்கங்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஆசிரியர், அதிபர் சேவைக்கு **B.C** பெரேரா சம்பள ஆணைக் குழுவால் உருவாக்கப்பட்ட 23 வருடங்களாக இருக்கும் சம்பள முரண்பாட்டை நீக்குதல் உட்பட 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடத்திய ஆர்ப்பாட்டங்கள் வேலை நிறுத்தங்களின் பலனாக கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவைக்குழு 2019 ஒக்டோபர் முதலாம் திகதி ஆசிரியர், அதிபர் சேவைகளை அகப்படுத்தப்பட்ட சேவையாக மாற்றி **(Closed Service)** புதிய சம்பளப் பிரமாணங்கள் செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டது.

தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக பிரயோகித்த அழுத்தங்களின் விளைவாக புதிய சம்பளத் திட்டத்தை அமுல்படுத்தும் வரை இடைக்கால சம்பள யோசனை ஒன்றை நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்பட்டதுடன் அதற்காக 2019 ஒக்டோபர் 15 ஆம் திகதி மீண்டும் அமைச்சரவையில் முடிவு எடுக்க வேண்டியதாக இருந்தது. அத்துடன் இடைக்கால சம்பளத்தைக் கொடுப்பதற்கான சுற்றறிக்கையை வடிவமைக்கும் வேலையை சம்பள ஆணைக்குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டது.

ஆசிரியர், அதிபர்கள் பல தசாப்த காலமாக நசுக்கப்பட்டு வரும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க கடந்த அரசாங்கத்தின் அமைச்சு எடுத்த தீர்மானம் தற்போதைய அரசாங்கத்தின் ஜனாதிபதி தேர்தலின் வாக்குறுதியாக மாறியது.

இந்த அரசாங்கம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்வாங்கி அதை ஏற்றுக் கொண்டதால் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் பொறுப்பில் இருந்து தற்போதைய அரசால் விலக முடியாது.

2019 டிசெம்பர் 17 ஆம் திகதி தற்போதைய கல்வி அமைச்சர் ஆசிரிய, அதிபர்களின் பிரச்சினை தொடர்பாக எமது தொழிற்சங்கங்கள் உரையாடி 2020.01.21 ஆம் திகதி அன்று கலந்துரையாடல் நடந்தாலும் உரிய பதிலும் கொடுக்கப்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் எமது சங்கங்கள் 2020.02.03 இற்கு முன் உரிய சுற்றறிக்கையை வெளியிடுமாறு கோரப்பட்டது அதை வெளியிடாததால் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வதாக எழுத்து மூலம் அறிவித்தோம்.

ஆனால் எமது கோரிக்கைகளுக்கு அரசு உரிய பதில் கொடுக்காத படியால் கடந்த 14 ஆம் திகதி தொழிற்சங்கங்கள் பல இணைந்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் அருகில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி மீண்டும் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுத்தோம்.

தற்போதைய அரசு இந்த செயற்பாட்டிற்கும் உரிய பதில் கொடுக்கத் தவறியபடியால் நாம் எல்லோரும் சுகயீன விடுமுறையை அறிவிக்கும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு போகத் தீர்மானித்துள்ளோம்.

இதற்காக இன்று 26 ஆம் திகதி புதன்கிழமை சுகயீன விடுமுறையை அறிவித்து காலை 9.30 மணியளவில் இசுறுபாய கல்வி அமைச்சுக்கு முன்னால் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் ஒன்று சேருவோம்.

தொழிற்சங்கங்கள் உங்களைத் தோழமையுடன் அழைக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)




**க.த.தயாளன்**
(தீவு முழுவதற்கும் சமாதான நீதவான்)
2020.02.20 அன்று மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேமசங்கர் அவர்களினால் இலங்கைத் தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு பாராட்டுவதுடன் இன்னும் மேன்மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
முருகானந்தன் குடும்பம் (அத்தான்), கமலதாசன் குடும்பம் (அத்தான்)
நண்பர்கள், உறவினர்கள்.
(C-9334)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: 73 செவ் 8 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Diploma in Journalism. Programme Manager,
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/10546

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 45 செவ் 3 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த உயர்தரம். வியாபாரம், கடை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10547

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 56 செவ் 2 ல்
உயரம்: 5'4
தகைமை/தொழில்: O/L, பாடசாலை காவலாளி
எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்
தொ.இ: B/10550

பிறப்பு: 1992, றோமன் கத்தோலிக்கம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Diploma, கணக்காளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10552

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம் 1 கி.பா: 32
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.Sc. பட்டதாரி. உதவி நிர்வாகசேவை அதிகாரி
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன். சைவபோசனம் உடையவர் மட்டும்
தொ.இ: G/10595

பிறப்பு: 1991 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: ஆயிலியம் 4 செவ் 11 ல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: B.Sc, M.Sc, Biology Teacher
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்
தொ.இ: G/10574

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4 கி.பா: 21 1/2 செவ் 11 ல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: **H.N.D. in Bussiness Management, Marketing Officer**
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/10597

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4 கி.பா: 18 3/4 செவ் 4 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bachelor of Bussiness Administration. Assistant Registrar.
எதிர்பார்ப்பு: Accountant, Engineer.
தொ.இ: G/7192

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction Works in the schedule below.

| Work /Service Details | Non refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (RS) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the Work (RS.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| 1. Complete Repair of Main Water Tank | 500.00 | 20,000.00 | 91 | 1.0 | C9 |
| 2. Aluminium cup-board for A & E Unit, Fixing Cubical Curtins for A & E Unit, Upper Floor and Renovation of Old OPD lab | 500.00 | 20,000.00 | 91 | 1.0 | C9 |
| 3. Painting of Ward No 09 and Renovation of Museum | 500.00 | 20,000.00 | 91 | 0.94 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna. during office hours, if necessary.

5. A Complete set of bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 27.02.2020 up to 12.03.2020 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 13.03.2020 late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching, Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman)
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.

(C-9335)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



**Botonical Name - Hemidesmus indicus**
**Family - Asclepiadaceae**
**Sinh - Iramusa.**

# நன்னாரி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பல்லாண்டு காலம் வாழக்கூடிய ஏறுகொடியாகும். வன்மையான



சிறுநன்னாரி

தண்டும் நல்ல வாசனையுடைய வேரையும் கொண்டது. இதன் தண்டுகள் பாலுள்ள தன்மையைக் கொண்டது. தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டதும் வேலுருவானதுமாகும்.

பச்சை கலந்த ஊதா பூக்களைக் கொண்டது. ஐப்பசி மாதத்தில் பூக்களைக் காணலாம். $P^H$ ஆனது 7.5-8.5 உள்ள மண்வளத்தில் நன்கு வளரக்கூடியது.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட தண்டுடன் கூடிய வேர்க்கன்றுகளை ஒட்டு இனவிருத்தி செய்யலாம்.

வேர்கள் முதிர்ச்சியடைய 2 1/2 வருடங்கள் செல்லும். எனவே ஒட்டு 2 1/2 வருடங்களின் பின் தான் வேர்களை சேகரிக்க வேண்டும்.

இதனுடைய வேர் நல்ல மணமுடையதால் இதற்கு நன்னாரி என்று பெயர் உண்டு. மலர்கள் சிறியவை. மஞ்சரிகள் இலைக் கோணங்களில் சோடியாகக் காணப்படும்.

இத் தாவர விளக்கத்தை உடைய இனமே தூய இனமாகும். ஆனால் பல இடங்களில் Cryptolepis Buchanaii எனும் தாவரத்தை நன்னாரி என்று பயன்படுத்துகிறார்கள். அது தவறு. தூய இனத்தில் இருக்கும் வேதியற் சத்துக்குள் இதில் காணப்பட மாட்டாது.

மேலும் மருந்துக் கடைகளில் விற்கப்படும் நன்னாரி வேரானது தூய நன்னாரி வேரல்ல. அது பெருநன்னாரி எனும் Decalepis hamiltonii எனும் ஏறுகொடித் தாவரத்தின் வேராகும்.

இவ்வேர் மாகாளிக்கிழங்கு என்று அழைக்கப்படுகின்றது. எனினும் தூய இன நன்னாரி வேரின் மருத்துவக் குணங்களையும் வேதியற் பொருட்களைக் காட்டிலும்



மாகாளி கிழங்கு


குறைவாகவே காணப்படுகின்றது.

இத்தூய இனமானது யாழ்.மாவட்டத்தில் பொதுவாக வேலியோரங்களிலும் தோட்டவெளி ஓரங்களிலும் பரம்பல் கூடுதலாக அவதானிக்கப்படுகின்றது. இதன் வேரோடு கொடியை பிடுங்கி நட்டும் பயிரிடலாம்.

இந்தியாவில் ஒரு சில குறவர்கள் காடுகளில், மலைகளில் இருந்து இந்த வேரைப் பச்சையாக வெட்டி எடுத்து வந்து விற்பதை ஒரு சில இடங்களில் அவதானிக்கலாம்.

நன்னாரி வேரைப் பறித்தவுடன் மண் நீக்கி அலச வேண்டும். பின்னர் அதன் மேலுள்ள கறுப்புத் தோலையும் உள்ளே நடுவில் உள்ள நரம்பையும் நீக்கி விட்டு பயன்படுத்த வேண்டும்.

அலசி சுத்தம் செய்த பச்சை நன்னாரி வேர் 20



கிராமை முதல் நாள் இரவில் 250 மில்லி காய்ச்சிய நீரில் ஊறவைத்து மூடி வைக்க வேண்டும். காலையில் எடுத்து கசக்கி பிழிந்து வடிகட்டி பனங்கற்கண்டு அல்லது தேன் கலந்து அருந்தவும் தோல் நரம்புகளுக்கு சுறுசுறுப்பு தரும். உடலை உரமாக்கும்.

காய்ந்த நன்னாரி 25 கிராம் எடுத்து இரவில் 400 மில்லி ஊறவைத்து காலையில் வடிகட்டி சாப்பிட வேண்டும். 2 மணிநேரம் வெந்நீரில் ஊறவைத்து வடிகட்டியும் 30 தொடக்கம் 60 மில்லி காலை, மாலை அருந்தலாம். இரத்தத்தை சுத்தி செய்யும். பசியைத் தூண்டும்.

25 கிராம் இடித்து தூள் செய்த நன்னாரி வேரை 250 மில்லி நீர் விட்டு காய்ச்சி 100 மில்லியாக வற்றக் காய்ச்சி குடிநீராக்கி இறக்கி வடிகட்டி இதனுடன் பால்இ தேன் சேர்த்து காலை, மாலை அருந்த இனிமையாக இருக்கும்.

தோல்வியாதிகள், தாகம், உடற்சூடு தீரும். உடல் பலம் பெறும். சிறுநீர் நன்கு வெளிப்படும். குழந்தைகள் முதல் வயோதிபர் வரையாவரும் பயன்படுத்தலாம்.

நன்னாரி, வெட்டிவேர் இரண்டையும் சம அளவு எடுத்து குடிநீர் வைத்துக் குடித்தால் பித்தம், உடற்சூடு தணியும்.

நன்னாரி, நெருஞ்சில் இரண்டையும் சம அளவு எடுத்து குடிநீர் வைத்துக் குடித்தால் சிறுநீரகக் கற்கள், பித்தப்பை கற்கள் கரையும்.

நன்னாரி, கொத்தமல்லி, பெருஞ்சீரகம் மூன்றையும் சம அளவு எடுத்து பொடித்து தினமும் 2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் உடற் பருமன் குறையும்.

நன்னாரி வேரை நெல்லிக்காய் சாறில் ஊறவைத்து உலர்த்தி பொடி செய்து தினமும் 2 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் கொழுப்பு கரையும். இதயம் வலுவடையும்.

### நன்னாரி சர்பத்

நன்னாரி வேர் 200 கிராம் எடுத்து ஒரு லீற்றர் கொதிக்கும் வெந்நீரில் இட்டு 4 மணிநேரம் ஊறவிட வேண்டும். அதன் பின் அடுப்பில் இட்டுக் காய்ச்சி 1/2 லீற்றராக வற்றிவரும் போது இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

இதனுடன் 400 கிராம் சீனி சேர்த்து கரைத்து வடித்து காய்ச்சி பதமாக இறக்கி கொள்ள சர்பத் ஆகிவிடும். 30 மில்லி லீற்றர் சர்பத்திற்கு 600 மில்லி லீற்றர்



தண்ணீரும் கலந்து அருந்த தாகம், வெள்ளை சாய்தல், சிறுநீர் எரிச்சல் தீரும். உஷ்ண காலத்திற்கு உகந்த பானம். நரம்பை பலப்படுத்தக் கூடியதாகவும் அமையும்.

உலர்ந்த நன்னாரி வேர்களை நடுநரம்பு நீக்கி இடித்து பலமுறை அரித்து வைத்துக் கொண்டு 1-2 கிராம் காலை, மாலை பாலில் எடுத்தாலும் மேற்கூறிய பலனை பாலில் எடுத்தாலும் மேற்கூறிய பலனை அடையலாம்.




நூலக நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் கண்காட்சியும் கலந்துரையாடலும் “மரபுரிமைகளைத் தேடி 2020”, எனும் தலைப்பில் அண்மையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது. நூலக நிறுவனமானது 15 வருட காலமாக ஈழத்து தமிழ் பேசும் சமூகத்தை எண்ணிம வடிவில் ஆவணப்படுத்தும் பணியில் 84 ஆயிரம் ஆவணங்களை ஆவணப்படுத்தியுள்ளது. குறித்த ஆவணங்களில் தெரிவு செய்யப்பட்ட அரிய ஆவ்ணங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. ஓலைச்சுவடிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள் ஆகிய அச்சிடப்பட்ட ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அத்துடன் சுவடிகள் மின்வருடி ஆவணப்படுத்தும் முறைமை, நூலக இணையத்தளங்களை கையாளும் வழிமுறைகள், வாய்மொழி வரலாறு செயற்பாடு, தொழிற்கலைகள் ஆவணப்படுத்தல் ஆகிய வகைகளிலான கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# இளைஞர்களைக் கடத்தி கொடுமைப்படுத்தி மிகவும் மோசமான முறையில் செயற்பட்ட சித்திரவதை முகாம் கண்டுபிடிப்பு!

## உணவகத்தை சுற்றிவளைத்து இருவரை மீட்ட பொலிஸார்

(புத்தளம்)

**புத்தளத்தில் இளைஞர்களைக் கடத்தி வைத்து கொடுமைப்படுத்தும் சித்திரவதை முகாம் ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்தனர். வென்னப்புவ, லுனுவில பிரதேசத்தில் உணவகம் ஒன்றினுள் இரகசியமாக நடத்தி செல்லப்பட்ட சித்திரவதை முகாம் பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.**

தொலைபேசி அழைப்பு கிடைத்தவுடன் செயற்பட்ட வென்னப்புவ பொலிஸார் அந்த சித்திரவதை முகாம் நடத்தி சென்ற உணவகத்திற்கு சென்றுள்ளனர்.

அங்கு 3 இளைஞர்கள் கொடூரமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு சித்திரவதை செய்யப்படுவதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதேவேளை பொலிஸார் குறித்த உணவகத்தை நெருங்கும் போது இளைஞர் ஒருவரை நாற்காலியில் கட்டி வைத்து கொடூரமான முறையில் தாக்கப்பட்டதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரால் காப்பாற்றப்பட்ட இளைஞன் பொலிஸாரிடம் தெரிவிக்கும் போது, "நல்ல நேரத்திற்கே வந்தீர்கள். இல்லை என்றால் என்னைக் கொலை செய்திருப்பார்கள். என்னுடன் மேலும் இருவருக்கு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாரிகள் வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். என்னை விடுவிக்கவில்லை. என்னைக் காப்பாற்றியதற்கு இன்னும் ஒரு முறை பொலிஸாருக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்.

இவ்வாறு காப்பாற்றப்பட்ட 18 வயதுடைய இளைஞன் மற்றும் விடுவிக்கப்பட்ட 16 வயதுடைய சிறுவன் ஆகியோர் மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மற்றைய இளைஞன் அச்சத்தில் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு இளைஞர்களைத் தாக்கிய சந்தேகநபர் அந்தப் பிரதேசத்திலுள்ள பிரபல குற்றவாளியான ஒலூ மராவின் சகோதரர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# தற்கொலைகளைக் கண்டித்து விழிப்புணர்வுப் போராட்டம்











(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் தற்கொலைகளைக் கண்டித்துத் தெல்லிப்பழைப் பிரதேச முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை தெல்லிப்பழை பேருந்து நிலைய முன்றலில் விழிப்புணர்வுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

"தற்கொலை ஒரு தீர்வா?" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், தெல்லிப்பழைப் பிரதேச முதியோர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், பிரதேச மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பலாலிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தெல்லிப்பழைப் பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தற்கொலைகளைத் தடுப்பது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையிலான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (இ-18)


பழைமை வாய்ந்த

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற



இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9249)

**ரெங்கசாமி** கண்டி, அம்பத்தன்ன - **077 112 3471** Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# சேவை நலன் பாராட்டு



## திருமதி. விஜயமலர் வசந்தகுமார்

எமது சபையில் 20 ஆண்டுகள் அரும் பணியாற்றி 26.02.2020 இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி.**விஜயமலர் வசந்தகுமார்** அவர்களின் சேவையினை மனதாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம். மேலும் அவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-9336)

**ஊழியர் நலன்புரிச சங்கம்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

# தொலைக்காட்சிப் பெட்டிகளை திருடிய நபர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் உள்ள பல வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளை திருடிவந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் நேற்று தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட தொலைக்காட்சிப்பெட்டிகளை விற்பனை செய்ய முற்பட்ட போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவருடன் இருந்த மற்றுமொரு நபர் தப்பியோடியுள்ளார்.

தப்பிச்சென்றவரை பொலிஸார் தேடி வருவதுடன் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-316)

# புதுமுறிப்பு குளத்தின் கீழ் 819 ஏக்கரில் நெற்செய்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தின் கீழ் 819 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலாளர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச.செந்தில்குமரன், கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ். அற்புதச்சந்திரன், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கிளிநொச்சி கமநல சேவைகள் உதவி ஆணையாளர் எஸ்.ஆயகுலன் உட்பட கிராம உத்தியோகத்தர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். (9-350)

# மன். புதைகுழி மனித எச்சங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்







(மன்னார்)

மன்னார் புதைகுழி மனித எச்சங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவுகளின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று மன்னாரில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான கவனயீர்ப்பு ஊர்வலம் மன்னார் சதொச மனித புதை குழிக்கு அருகில் சென்று நிறைவடைந்தது.

சதொச புதைகுழியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரியும், நீதியான விசாரணை நடத்தக் கோரியும், சர்வதேச தலையீட்டை வலியுறுத்தியும், அத்தோடு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் நேரடித் தலையீட்டை வலியுறுத்தி இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (9-285)

# சஜித்துடன் இணைந்தே போட்டி; சின்னமே தற்போதுள்ள பிரச்சினை

## ரிஷாட் தெரிவிப்பு



(குருமன்காடு)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான கூட்டமைப்பில் இணைந்து தேர்தலில் போட்டியிடவுள்ளோம். தற்போது யானையா, அன்னமா அல்லது வேறு சின்னமா என்ற பிரச்சினை தான் உள்ளது என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். வவுனியா, குருமன்காடு கலைமகள் விளையாட்டு மைதானம் அருகில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தை திறந்து வைத்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாஸவை பொதுவேட்பாளராக நிறுத்திய போது நாம் அவரது வெற்றிக்காக இரவு பகலாக உழைத்தோம். குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் பூரண ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதிலே பல கட்சிகளோடு சேர்ந்து எமது கட்சியும் முக்கிய பாத்திரத்தை வகித்தது. அந்தவகையில் தற்போது பாராளுமன்ற தேர்தலை நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம். இந்தப் பாராளுமன்ற தேர்தலில் சிறுபான்மை சமூகம் ஒன்றுபட்டு, தமக்காக பேசக்கூடிய தமக்கான பிரதிநிதிகளை பெற்றுக் கொள்வதற்கான நல்ல தருணம் வந்திருக்கின்றது.

வரப்போகும் நாடாளுமன்ற தேர்தலை ஒற்றுமையாக நாடு பூராகவும் முகம் கொடுப்பதற்கு மனோகணேசன் தலைமையிலான கட்சியும், இராதாகிருஸ்ணன் தலைமையிலான கட்சியும், திகாம்பரம் தலைமையிலான கட்சியும், ரவூவ் ஹக்கீம் தலைமையிலான கட்சியும், எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும், பல சிவில் அமைப்புக்களும், பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து பாரிய கூட்டமைப்பாக போட்டியிடவுள்ளோம்.

இந்த நாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமில்லாமல் எல்லோரும் சமத்துவமாக, சகோதரத்துவமாக வாழக்கூடிய ஒரு கூட்டமைப்பை உருவாக்கி அந்தக் கொள்கையோடு நாடு முழுக்க போட்டியிட இருக்கின்றோம்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை சிறுபான்மை சமூகம் இந்த நாட்டில் ஏனைய சமூகத்தோடு சேர்ந்து வாழுகின்ற ஒரு நல்ல நிலையை உருவாக்குகின்ற தேர்தலாக பார்க்கின்றோம்.

இனவாத, மதவாத சக்திகளை தோற்கடிப்பதற்காக எமது கூட்டமைப்பு ஒன்றுபட்டு செயற்படும். கடந்த தேர்தலில் 5 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது போல் இம்முறை 7 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட இடங்களில் போட்டியிடவுள்ளோம்.

இதனால் வரப்போகும் அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக நாங்கள் விளங்குவோம் என மேலும் தெரிவித்தார். (9-250)

# இரணைமடு குளத்தின் கீழ் 15,150 ஏக்கரில் நெற்செய்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் பதினையாயிரத்து 150 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையும் 500 ஏக்கர் உப உணவுச் செய்கையும் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் குளங்களில் தற்போதுள்ள நீர் கொள்ளளவுகளை பொறுத்து சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்று அதற்கு அமைவாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு பயிர்ச்செய்கைக்கான முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக் குளத்தின் சிறுபோக பயிர்ச்செய்கை தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நீரைச் சிக்கனமாக பயன்படுத்தி கடந்த ஆண்டு போன்று சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனைத்து விவசாயிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் கால்நடைக் கட்டுப்பாடுகள் மேலதிக விதைப்புக்களை கட்டுப்படுத்துதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி கலந்துரைடலில் மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர்கள் விவசாய ஆராய்ச்சி பணிப்பாளர் கலாநிதி அரசகேசரி, நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் செல்வராஜா, விதைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். (9-315)




# அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு க. பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் தமது அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நாளை வியாழக்கிழமைக்கு முன்பு தேசிய அடையாள அட்டையுடன் பாடசாலை சீருடையில் சென்று பெற்றுக் கொள்ளுமாறு கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய முதல்வர் திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம் அறிவித்துள்ளார். (9-271)

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில்

# யுத்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால் இலங்கை அரசு விலக முற்படுகிறது

## சாந்தி எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சர்வதேச விசாரணைகளில் யுத்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதனால் இலங்கை அரசு ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இருந்து விலக முற்படுகின்றது. அவ்வாறு அவர்கள் நினைத்தவுடன் விலகுவதற்கு இது ஒன்றும் அவர்கள் வீட்டுக் கல்யாணம் இல்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் காரியாலயத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் எமது முப்பது வருடகால யுத்தத்தில் அபிவிருத்தி, வீதிகள் அமைக்கவோ, வீடுகள் அமைக்கவோ நாம் போராடவில்லை. தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகவே எமது பிள்ளைகள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளனர்.

இன்றும் நாம் அபிவிருத்தி என்பதனைத் தாண்டி எமது தமிழர்கள் தன்மானத்துடன், சுய மரியாதையோடு தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகப் போரடி வருகின்றோம்.

இறுதி யுத்தத்திலே இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றிற்கு இந்த உள்நாட்டுக்குள் அரசு பரிகாரம் தேட மறுத்துவிட்டது. எனவே நாம் அதனைச் சர்வதேசத்திடம் எடுத்துரைத்தோம். அந்த வகையில் ஜெனீவாத் தீர்மானத்திலே இலங்கையில் இடம்பெற்றது போர்க்குற்றம் தான், மனிதப் படுகொலைகள் இங்கு இடம்பெற்றிருக்கின்றன என்பது சர்வதேச விசாரணை ஊடாக நிரூபிக்கப்பட்டதன் பின்பு, இன்றைய அரசு அதிலிருந்து விலகுவதாக தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதிலே அவர்கள் இணை அனுசரணை தெரிவித்துள்ளனர். மனித உரிமைப்பேரவையிலிருந்து இந்த அரசு விலகுமேயானால், எங்களுடைய மக்களினுடைய விடிவிற்காக, இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றத்திற்கு உரிய குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதற்காக மாற்று வழிகளை நாம் கையாளுவோம் என மேலும் தெரிவித்தார். (9)

# அக்கராயன் குளத்தின் கீழ் 2,790 ஏக்கரில் நெற்செய்கை

(அக்கராயன்)

கிளிநொச்சியின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தின் கீழ் 2,790 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட வுள்ளது.

இதற்கான கூட்டம் கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலாளர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயிகளினால் அக்கராயன் குளத்தின் 4 ஆம் வாய்க்கால் உட்பட முக்கிய வாய்க்கால்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் நெல்லிற்கான நிர்ணய விலை அறுடை தொடங்க முதல் நிர்ணயிக்கப்பட வேண் டும் எனவும் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

விவசாயிகளின் கருத்துகள் முன் வைக்கப்பட்ட நிலையில் இவ்வாண்டு 2,790 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (9-350)

# சிவராத்திரி தினத்தன்று விடுமுறை எடுத்த இ.போ.ச.ஊழியர்கள் மீது ஒழுக்காற்று விசாரணை

(நெளுக்குளம்)

**வவுனியா இ.போ.ச. சாலையிலுள்ள ஊழியர்கள் 25 பேர் சிவராத்திரி தினத்தில் விடுமுறை எடுத்துக் கொண்டதற்கு எதிராக வவுனியா சாலை முகாமை யாளரால் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்து ள்ளனர்.**

கடந்த சனிக்கிழமை எமது இ.போ.ச. சாலைக்குரிய சட்ட விழுமியங்களுக்குட் பட்டு எமது சமய வழிபாடுகளையும் கட மைகளையும் மேற்கொள்வதற்காக சிவ ராத்திரி தினத்திற்கு விடுமுறை எடுத்துக் கொண்ட வவுனியா இ.போ.ச.சாலை ஊழியர்கள் 25 பேருக்கு எதிராகவும் இதற்கு தலைமை வகித்ததாக சாரதி ஒருவரையும் விசாரணைக்கு சமூகமளிக்கு மாறு சாலை முகாமையாளரால் அறிவிக் கப்பட்டுள்ளதாகவும் இதனால் இ.போ.ச. சாலையிலுள்ள இந்து மதத்தவர்களுக்கு எதிராக மதவாதம் திணிக்கப்பட்டுள்ளதுடன் எமது சமயக் கடமைகளை மேற்கொள் வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டுள் ளன.

வருடத்தில் ஒரு முறை வரும் சிவ ராத்திரி தினத்தில் விடுமுறை எடுத்துக் கொண்டுள்ளதால் நிர்வாக ரீதியாக குறித்த 25 பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடி க்கை மேற்கொள்வதற்கு வட பிராந்திய பிரதான முகாமையாளர் மற்றும் வவுனியா சாலை முகாமையாளர் ஆகியோரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது.

நிர்வாக ரீதியில் உயர் பதவிக்கு இந்து சமயத்தவர் இல்லாத காரணமாகவே எம் மீது இவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது. எமது இ.போ.ச.சாலையில் இந்து சமயத்தவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க இந்து அமைப்புக்களும் சமூக அமைப்புக்களும் முன்வரவேண்டும் என்று இ.போ.ச.சாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் குறித்து வவுனியா சாலை முகாமையாளர் எச்.ஷாகீருடன் தொடர்பு கொண்டு வினவிய போது,

பேருந்துகளுக்குரிய நடத்துநர்களை வேறு சாலைகளில் இருந்து எடுத்து ஓடி சரியான முறையில் செயற்பட்டு இருந்ததால் வருமானம் குறையவில்லை. இங்கு வேலையை திட்டமிட்டு புறக்கணித்தவர் களுக்கு சரியான நடவடிக்கை எடுப்பதற்கு இருக்கின்றோம்.

எங்களுடைய விசாரணைகள் முடிவ டைந்ததன் பின்னர் வட பிராந்திய முகா மையாளரிடம் அனுப்புமாறு கூறியுள்ளார். அவர் இவர்களுக்கான தண்டனையை வழங்குவாரென மேலும் தெரிவித்திருந் தார். (9-299)

# பரிசளிப்பு விழா



(முறிகண்டி)

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் கரும்போக்கு விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடா ந்த பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற் றுக்கிழமை கல்வி நிலைய வளா கத்தில் கல்வி வளர்ச்சி அறக்கட்ட ளையின் தலைவரும்யாழ்போதனா வைத்தியசாலையின் பணிப்பாள ருமான வைத்தியர் த.சத்தியமூர் த்தி தலைமையில் இடம்பெற்றது.

2019 ஆம் ஆண்டு தரம் ஆறு முதல் உயர்தர வரை, விஞ்ஞான பிரிவுகளில் சிறந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற் றும் பரிசில்கள் வழங்கிக் கௌர விக்கப்பட்டனர். அத்தோடு இணை பாட செயற்பாடுகளில் மாகாணம், தேசிய மட்டத்தில் சாதித்த மாண வர்களும் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கிக் கௌர விக்கப்பட்டனர். (9-100)




# மாணவர்கள் மத்தியில் அறநெறிக் கல்வி அவசியம்

## கிளி.இந்து கலாசார உத்தியோகத்தர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பஞ்சமா பாதகங்களை பரவ விடாமல் தடுக்கவல்ல சக்தி அற நெறிக் கல்விக்கு மட்டுமே உண்டு. இதன் காரணமாகவே அறநெறிக் கற்கையை வளர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என கிளி நொச்சிமாவட்ட இந்து கலாசார உத் தியோகத்தர் சைவப்புலவர் பொன். சுகந்தன் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேசத்தில் குமுழ முனை ஞான வைரவர் ஆலயத் தில் நடைபெற்ற அறநெறி விழிப் புணர்வு விழாவில் சிறப்புரை ஆற் றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில், அறநெறிக் கல்வியின் ஊடாக அன்பு, பண்பு ஜீவகாருண் யம் என்பன ஏற்பட்டு சமூகத்தில் முன்னேற்றம் ஏற்படும். இத்தகைய அறநெறிக் கல்வியை தங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டுவதற்கு பெற்றோர்கள் முன்வர வேண்டும்.

பெற்றோர்கள் ஊக்கம் காட் டும் போது தான் பிள்ளைகளும் அறநெறி வகுப்புக்களுக்கு தவ றாது கலந்து கொள்வார்கள். எனவேதான் இன்றைய காலத்தை பொறுத்தமட்டில் அறநெறிக் கல்வி யின் அவசியத்தை எல்லோரும் உணர்ந்து கொண்டு அற நெறியை வளர்ப்பதன் ஊடாக அன்பான சமூகத்தினை உருவா க்குவோம். (9)





**கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் தாய் மொழி தினம் நேற்று முன்தினம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் முத்தமிழ் மன்றத் தலைவர் இ.டனுஜன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் கி.உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் க.கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து தமிழ்தின போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது.**

# ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வு இன்று

(நெளுக்குளம்)

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வுகள் இன்று புதன்கிழமை முதல் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட 3,100 விண்ணப்பதாரிகளுக்கே மேற்படி நேர்முகத் தேர்வுகள் இடம்பெறவுள்ள நிலையில் கடிதங்கள் கிராம உத்தி யோகத்தர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இன்று புதன்கிழமையிலிருந்து சனிக்கிழமை 29 ஆம் திகதி வரை குறித்த நேர்முகத் தேர்வுகள் இடம்பெறவுள்ளன. நேர்முகத் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் கடிதங்களை அந்தந்த கிராம உத்தியோகத்தர்களிடம் பெற்று நற்சான்றிதழ் பத்திரத்துடன் கடிதத்தினையும் நேர்முகத் தேர்வுக்கு கொண்டு வருமாறு பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர் பிரிவாக நேர்முகத் தேர்வுகள் இடம்பெறவுள்ளதால் விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் கிராம உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும் கிராமத்தைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள் அன்றைய தினம் பிரதேச செயலகங்களிலேயே கடமையில் ஈடு படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)

# காங்கிரசின் அலுவலகம் திறப்பு



(நெளுக்குளம்)

வவுனியாவில் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் மாவட்ட காரியாலயம் நேற்று முன்தினம் திறந்து வைக் கப்பட்டது. வவுனியா குருமன்காட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் மாவட்ட காரியாலயம் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சருமான றிசாத் பதியுதீனால் திறந்து வைக்கப் பட்டது. இந் நிகழ்வில் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-299)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாற்றல் அறக்கட்டளையினால் நடத்தப்பட்ட உளசமூகப் பணியாளர்களை உருவாக்குவதற்கான வதிவிடப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ் வழ ங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளி நொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள ஒப்ரெக் நிறுவன மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அருட்பணி றெனால்ட் றெமிஜிரஜனும் சிறப்பு விருந்தி னர்களாக மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திர னும் சோவா நிறுவனத்தின் தேசிய இணைப்பாளர் அன்ரனி கலிசியசும் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

# நீதிமன்ற அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதவான் நீதி மன்றில் வழக்கு இலக்கம் B/1973/19 வழக்குடன் தொடர்புடைய சான்றுப் பொருளான இலக்கத் தகடுகள் அற்ற சிறிய உழவு இயந்திரம் (Land Master) அதன் பெட்டியும் வனப் பரிபாலன திணைக்களத்தின் கிளிநொச்சி வட்டார வன அதிகாரியினால் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 18.06.2020 ஆம் திகதிக்கு முன்னர் மன்றுக்கு சென்று பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# பாரதம்

## டில்லியில் வன்முறைப் போராட்டம் அரசியல் தலைவர்கள் கண்டனம்

(டில்லி)

டில்லியில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகவும், ஆதரவாகவும் நடைபெற்ற போராட்டங்களின் போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் தலைநகர் டில்லியின் ஜாபர் பாத், பஜன்புரா, சந்த்பாத், யமுனா விஹார் மற்றும் மஜ்பூர் பகுதிகளில் நேற்று முன்தினம் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்தப் போராட்டங்களில் இரு தரப்பினருக்கும் இடையே வன்முறை ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த தலைமைக் காவலர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 50 பேர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், தலைநகர் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இது குறித்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில்,



"தங்கள் வகுப்புவாத மற்றும் பிளவுபடுத்தும் சித்தாந்தத்தை மக்கள் மீது திணிக்க முற்பட்டு வன்முறையை தூண்ட முயற்சிக்கும் சக்திகளுக்கு காந்தியின் பூமியில் மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டிலும் இடமில்லை"

டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இந்த விவகாரம் தொடர்பாக நான் துணை நிலை ஆளுநரிடம் பேசியுள்ளேன். அவர் கூடுதல் பொலிஸாரை பாதுகாப்புக்கு அனுப்பி வைக்க உத்தரவாதம் வழங் கினார்.

வன்முறையை யாரும் அனுமதிக்கமாட்டார்கள். மக்கள் அமைதி காக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். வன்முறை மூலம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்காது" என குறிப்பிட்டார். காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தி டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

" டில்லியில் நடைபெற்ற வன்முறை தொந்தரவு அளிக்கக் கூடியது மட்டுமல்லாமல் சந்தேகத்திற்கு இடமின்றி கண்டனத்திற்கு உரியது. அமைதி முறையிலான போராட்டங்கள் ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கான அடையாளங்கள்.

ஆனால் வன்முறை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. என்ன விதமான ஆத்திரம் இருந்தாலும் டில்லி மக்கள் கட்டுப்பாடு, இரக்கம் மற்றும் புரிதலுடன் செயற்படும்படி கேட்டுக்கொள்கிறேன்" எனக் கண்டனம் வெளியிட்டனர். (ஐ-2)

## சீனாவில் தொ

## உயிரிழப்பு 26

(பீஜிங்)

**சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பினால் நேற்று மேலும் 71 பேர் உயிரிழந்த நிலையில், பலி எண்ணிக்கை 2,663 ஆக உயர்ந்துள்ளது.**

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் பற்றி நாம் அனைவரும் அறிந்ததே. சீனாவில் ஹூபெய் மாகாணம் வுஹான் நகரில் இருந்து கடந்த டிசெம்பர் மாதம் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் நாடு முழுவதிலும் பரவி, பெருமளவிலான உயிரிழப்பை ஏற்படுத்தியுள்ளது. அவுஸ்திரேலியா, ஈரான், இத்தாலி, மலேசியா போன்ற 25 நாடுகளில் கொரோனா வைரஸ் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



## விண்ணில் பறக்க மு

## விமானி தவறி விழு



## மெக்சிக்கோ கடற்கரைப் பகுதியில் ஒதுங்கிய கண்களில்லாத உயிரினம்

(மெக்சிகோ சிட்டி)

மெக்சிகோ கடற்கரை பகுதியில் டொல்பின் தலை போன்ற அமைப்புடைய கண்கள் அற்ற விநோத உயிரினம் ஒன்று கரை ஒதுங்கியது.

மெக்சிகோ நாட்டில் அமைந்துள்ள அழகிய கடற்கரை நகரம் புவேர்ட்டோ வல்லார்டா. கடற்கரை நகரமான இங்கு அதன் எழில் மற்றும் இயற்கையை ரசிக்கவும், கடலில் அலைச்சறுக்கு சாகசங்கள் செய்யவும் பல்வேறு நாட்டு சுற்றுலாப்பயணிகளும் வருகை தருவது உண்டு.

இந்நிலையில், அப்பகுதியில் உள்ள டெஸ்டிலாடெரஸ் கடற்கரையில் கண்கள் இல்லாத விநோத உயிரினம் ஒன்று கரை ஒதுங்கியது சற்று பரபரப்பை ஏற்படுத்தியது.

சம்பவ தினத்தன்று கடற்கரையில் மக்கள் பொழுதை போக்கிக் கொண்டிருந்தனர். அப்போது உயிரிழந்த நிலையில் ஒரு உயிரினம் கரை ஒதுங்கியது. தூரத்தில் இருந்து பார்ப்பதற்கு டொல்பின் போன்று தோற்றமளித்ததால் மக்கள் அருகில் சென்று பார்த்தனர். ஆனால் கண்கள் இல்லாமல் கொடிய பற்களுடனும், தலைப் பிரட்டை போன்ற வாலுடனும் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

பசுபிக் கடலின் மிக ஆழமான கடல்பகுதியில் (சூரிய ஒளி புகமுடியாத ஆழம்) இருந்து அந்த உயிரினம் வந்திருக்கலாம். அத்தகைய ஆழத்தில், முழுவதும் இருளாக இருக்கும் பட்சத்தில் கண்கள் தேவைப்படாமல் இருக்கலாம் என அந்நாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன. (ஐ-2)

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிற்கு இந்தியாவில் உற்சாக வரவேற்பு





(டில்லி)

இந்தியா சென்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அவரது மனைவி மெலனியா ட்ரம்ப் ஆகியோருக்கு ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் வரவேற்பு அளிக்கப்பட்டது. ட்ரம்புக்கு முப்படை வீரர்கள் அணிவகுப்பு மரியாதையும் செய்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இரண்டு நாள் சுற்றுப்பயணமாக இந்தியா சென்றார்.

அவருடன் மனைவி மெலனியா ட்ரம்ப், மகள் இவான்கா ட்ரம்ப், மருமகன் ஜாரெட் குஷ்னர் மற்றும் உயர்மட்டக் குழுவினரும் சென்றனர். நேற்று முன்தினம் சபர்மதி ஆச்சிரமத்தை ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியா ட்ரம்ப் பார்வையிட்டனர். அவர்களுடன் மோடியும் சென்றார். (ஐ-2)

## துருக்கிப்

## சிரியப்பல

(டமாஸ்கஸ்)

இட்லிப் மாகாணத்தில் துருக்கிப் படைகள் நடத்திய தாக்குதலில் சிரிய அரசுப்படையினர் 9 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் 2011ஆம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டுப்போர் தற்போது உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. குர்திஷ் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அந்நாட்டின் வடக்கு பகுதிகளை தற்போது சிரிய அரசுகள் தங்கள் வசம் கைப்பற்றி வருகின்றன.

மேலும், வடக்குப் பகுதியில் உள்ள இட்லிப் மாகாணத்தில் அரசுக்கு எதிராக செயற்பட்டு வரும் போராளிகள் குழுக்கள் மீதும் ரஷ்யா உதவியுடன் சிரியா இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இட்லிப் மாகாணத்தின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள போராளிகள்



குழுக்களுக்கு
வருகிறது.
லைக்குள் து
யும் குவித்து
இதனால்
இப்போர் த

# வெளிநாடு

# தொடரும் சோகம்


# 2663 ஆக அதிகரிப்பு



கொரோனா வைரஸ் பரவுவது தற்போது குறையத் தொடங்கியுள்ளது. எனினும், வைத்திய சாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்நிலையில், சீனாவில் மேலும் 71 பேர் கொரோனா வைரசுக்கு பலியாகி யுள்ளனர். இதன்மூலம் சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு பலியானோரின் எண்ணிக்கை 2,663 ஆக உயர்ந்திருப்பதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். (ஜ-2)

## க முயன்ற

## விழுந்து பலி



(நியூயோர்க்)

அமெரிக்காவில் நீராவி ரொக்கெட் மூலம் விண்ணில் பறக்க முயன்ற விமானி மைக், பல நூறு அடி உயரத்தில் இருந்து தரையில் விழுந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்தவர் மைக் ஹியூஸ் (வயது 64). விமானியான இவர் பூமி தட்டையானது என்றும், அதனை நிரூபிப்பேன் என்றும் கூறி வந்தார். மேலும் அவர் விண்வெளிக்குச் செல்வதற்காக முற்றிலும் நீராவியால் இயங்கும் ரொக்கெட்டை வீட்டிலேயே தயாரித்து, அதனைத் தொடர்ந்து சோதித்து வந்தார். மைக், கடந்த ஆண்டு மார்ச் மாதம் தனது ரொக்கெட் மூலம் தரையில் இருந்து 1,870 அடி உயரத்துக்கு பறந்து பரசூட் மூலம் தரையிறங்கினார்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை மீண்டும் தனது நீராவி ரொக்கெட் மூலம் விண்ணில் பறக்க மைக் முயன்றார். இம்முறை 5,000 அடி உயரத்தை அடைய வேண்டும் என்பதை அவர் இலக்காக கொண்டிருந்தார். திட்டமிட்டபடி அவரது நீராவி ரொக்கெட் விண்ணில் சீறிப் பாய்ந்தது. ஆனால் ரொக்கெட் சென்ற வேகத்தில் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த பரசூட் தனியே பிய்த்துக்கொண்டு சென்றுவிட்டது.

இதனால் பல நூறு அடி உயரத்தில் இருந்து ரொக்கெட் தரையில் விழுந்து நொறுங்கியது. இதில் மைக் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். (ஜ-2)

# கிப் படைகள் தாக்குதல்

# படையினர் 9 பேர் பலி



குழுக்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது. மேலும், சிரியாவின் எல்லைக்குள் துருக்கி தங்கள் படைகளையும் குவித்து வைத்துள்ளது.

இதனால் உள்நாட்டில் தொடங்கிய இப்போர் தற்போது இட்லிப் மாகாணத்தை கைப்பற்றும் நோக்கில் உள்ள துருக்கி-சிரியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையே போர்ப்பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கியின் இந்த நடவடிக்கையால் ரஷ்யா மிகுந்த ஆத்திரம் அடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி வருகிறது.

மேலும், தங்கள் நாட்டு எல்லைகளை பாதுகாக்க போராடி வரும் சிரிய படைகள் மீது துருக்கி தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் இட்லிப் மாகாணம் நைரொப் மற்றும் நய்ரப் பகுதிகளில் துருக்கி படைகள் திடீரென குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் சிரிய அரசுப் படையினர் 9 பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையில் சிரிய அரசுப்படையினருக்கும் துருக்கி ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் 94 பேர் உயிரிழந்துள்ளதாக மனித உரிமைகளுக்கான கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (ஜ-2)

## கொரோனா வைரஸ் பற்றிய சில செய்தித் துளிகள்

### ஜப்பான் சொகுசு கப்பலில் உள்ள இந்தியர்கள் 14 பேருக்கு கொரோனா




### ஈரானில் கொரோனா வைரஸ் தாக்கி பலியானோர் எண்ணிக்கை 12 ஆக உயர்வு



### கொரோனா வைரஸ் பீதி- பிளாஸ்டிக் கவரால் உடலை மூடி பயணித்த விமானப் பயணிகள்



### கொரோனா வைரஸ் சீனாவில் பலி எண்ணிக்கை 2663 ஆக உயர்ந்தது



### சீனாவைத் தொடர்ந்து தென் கொரியாவில் தீவிரமாக பரவும் கொரோனா- இதுவரை 7 பேர் பலி



# ஜெனிவா விவகாரத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் லாபம் தேட முயற்சி!

## ஆளும், எதிர்த்தரப்பினர் மீது முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

(பத்தரமுல்லை)

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அதன் ஊடாக எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இதேவேளை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையை காரணம் காட்டி ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றார்கள் என முன்னிலை சோசலிசக் கட்சி குற்றம்சாட்டியது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நாட்டுமக்களுக்களித்த வாக்குறுதிகளிலிருந்து விலகிச் செயற்படுகின்றது. ஆகவே பொதுத்தேர்தலின் போது நாட்டுமக்கள் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் முன்னிலை சோசலிச கட்சியின் கல்வி விவகார செயலாளர்புபுது ஜெயகொட தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்த மக்களின் எதிர்பார்ப்புக்கள் இன்று நிறைவேற்றப்படவில்லை.

மாறாக அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மஹறகம புற்றுநோய் வைத்தியசாலையில் 11 அத்தியாவசிய மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அதேவேளை நாட்டில் உரத்தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததையடுத்து 15 ஆயிரத்திற்கும் அதிகமானோர் அரச பணிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.

ஏகாதிபத்திய ஆட்சியை இல்லாதொழிப்பதாக இந்த அரசாங்கம் கூறிக்கொண்டது. ஆயினும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மாறுபட்ட விதத்தில் அமைந்துள்ளன.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 43 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களிலிருந்தும் விலகுவதற்கு இந்த அரசாங்கம் தீர்மானம் எடுத்தது.



அந்த 30/1 என்ற தீர்மானத்தில் மிக முக்கியமாக யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பாக விரிவான சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த விசாரணைப் பொறிமுறையில் பொதுநலவாய நாடு நீதிபதிகள், சட்டத்தரணிகள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளும் இடம் பெற்றிருந்தன.

சர்வதேச நாடுகளில் யுத்த அணுகுமுறைகள் தொடர்பில் விதிமுறையுண்டு.

அதனை மீறி இலங்கை செயற்பட்டுள்ளதாகவே கூறப்படுகின்றது. ஆகவே, இதன் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் அனைத்து உலக நாடுகளுமே பொறுப்புக்கூற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மரக்கறி விலைகளை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கவும்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

அதிகரித்த மரக்கறி விலைகளை கட்டுப்படுத்தி விவசாயிகளை பாதுகாக்கும் வகையிலும் நுகர்வோருக்கு நிவாரணம் கிடைக்கும் வகையிலும் நிகழ்ச்சித்திட்டமொன்றை உடனடியாக தயாரிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.



மரக்கறிகளின் அதிகரித்த விலை வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கு பெரிதும் தாக்கம் செலுத்துகின்றது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக தலையிட வேண்டியுள்ளதென ஜனாதிபதி மகாவலி அபிவிருத்தி அமைச்சு மற்றும் வர்த்தக அமைச்சுக்களின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

மரக்கறி பயிரிடப்படும் பிரதேசங்களிலிருந்து தம்புள்ளைக்கு மரக்கறிகள் கொண்டு செல்லப்படுகின்றன. அதன்பின்னர் தம்புள்ளையில் இருந்து மீண்டும் குறித்த பிரதேசங்களுக்கு மரக்கறிகள் விநியோகிக்கப்படுகின்றன. போக்குவரத்தின்போது இடம்பெறும் வீண்விரயத்தின் காரணமாக அறுவடை பெருமளவு வீணாகின்றது. இது ஒருபோதும் சரியான முறைமையாக இருக்க முடியாதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தோட்டக்கம்பனிகளிடம் உள்ள அரச காணிகளில் தென்னை பயிருடன் மட்டுப்பட்டு இருக்காது மரக்கறி பயிர்ச் செய்கைக்கான வாய்ப்புக்களையும் கண்டறிவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதார மத்திய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது நுகர்வோருக்கும் சிறிய வர்த்தகர்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்காக என்றபோதும், அவை பாரியளவிலான வியாபாரிகளின் ஆதிக்கத்தின் காரணமாக எழுந்துள்ள நிலைமைகள் குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செயற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. இராணுவத்தினரின் உதவியுடன் அந்நடவடிக்கை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பல பிரதேசங்களில் நெற் களஞ்சியங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. ஏனைய நெற் களஞ்சியங்களையும் புனரமைக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

மொரகஹகந்த - களுகங்கை திட்டத்தின் குடியிருப்பாளர்களின் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அவற்றிற்கு வழங்க முடியுமான உடனடித் தீர்வுகள் மற்றும் ஒப்பந்த நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படாத காரணத்தால் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

உமாஓயா போன்ற திட்டங்களைப் பாதுகாப்பதற்கு அதனை அண்டிய பிரதேசங்களில் வன ஒதுக்கீடுகளை உருவாக்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## செல்வம்

ஒரு ஊரிலே ஒரு பெரிய செல்வந்தர் இருந்தார். பணத்துக்குப் பஞ்சம் இல்லை. அதனாலே இந்த உலகத்திலே முடியாத காரியம் எதுவுமே இல்லை என்று நினைத்தார். பணம் இருந்தாலே அந்த நினைப்பு தானாக வந்துவிடும். அதனால் இவரும் அப்படி நினைத்ததில் தப்பில்லை.

அந்த ஊருக்கு குருநானக் ஒரு தடவை வந்தார். அவருக்கு இந்த செல்வந்தர் ரொம்ப பிரமாதமாக வரவேற்பு கொடுத்தார். ஊர் எல்லையிலேயே. எங்க வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட்டுப் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவரும் சரி என்று ஒத்துக் கொண்டார்.

உடனே தன்னுடைய பங்களாவில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு பண்ணினார். குருநானக்கை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார். உட்கார வைத்தார். ஐயா... நான் இந்த ஊரிலேயே ரொம்ப பெரிய வசதி உள்ளவன்.

என்னாலே எல்லாம் முடியும். உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்னாலே செய்ய முடியும் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க என்றார் ரொம்ப பணிவாக.

இதைக் கேட்டதும் குருநானக் சிந்தித்தார் கொஞ்சநேரம். அதற்கு பின்னர் தன்னுடைய சட்டைப் பையினுள் கையை விட்டு ஒரு பழைய ஊசி ஒன்றை எடுத்தார். அந்த செல்வந்தரிடம் கொடுத்தார். இதோ பாருங்கள் இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பதனால் சொல்லுகிறேன். எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய உதவி இது தான் என்றார்.

ஊசியை கையில் வாங்கிவிட்டு இதை என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்றார் அவர்.

நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால்... இந்த ஊசியைப்பத்திரமாக வைத்திருக்க வேண்டும். நாங்கள் இரண்டு பேரும் இறந்து போனதன் பின்னர் இன்னொரு உலகத்திலே சந்திக்கக் கூடிய வாய்ப்பு இருக்கு.

அப்போது இந்த ஊசியை என்னிடம் கொண்டு வந்து கொடுங்கள். இதுதான் நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டிய உதவி என்றார் குருநானக் இலேசா சிரித்துக்கொண்டே.

இதைக் கேட்டவுடனே அந்தப் பெரியவர் முழிக்க ஆரம்பித்தார். அது எப்படி? நான் சாகும்போது எப்படி இந்த ஊசியை எடுத்துக் கொண்டு இன்னொரு உலகத்திற்கு வரமுடியும்? என்றார். ஊசி மாதிரி ஒரு சின்ன பொருளைக்கூட இந்த உலகத்தை விட்டு நாம் போகின்றபோது எடுத்துக்கொண்டு போகமுடியாது என்கிறபோது உங்களுடைய செல்வத்தையெல்லாம் எப்படி அங்கே எடுத்துக்கொண்டு வரப் போகிறீர்கள்? என்று கேட்டார் குருநானக்.

அதற்குப் பின்னர் தான் அந்தப் பெரியவர் யோசிக்க ஆரம்பித்தார். குருநானக் சொன்னார், இதோ பாருங்க... நாங்கள் செயயும் நல்லது கெட்டதுதான் கடைசி வரைக்கும் நம்ம கூட இருக்கும். அடுத்தவர்கள் நல்லா இருக்க வேண்டும் என்பதற்காக பொருளை செலவு செய்ய வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் பிரயோசனமும் இல்லை என்றார்.

அதற்குப் பின்னர் தான் அந்த செல்வந்தரின் அறிவுக்கண் திறந்ததாம். உடனே குருநானக்கை வணங்கினார். ஐயா... என்னிடம் இருந்த ஆணவம் போய்விட்டது. இனிமேல் என்னிடம் இருக்கின்ற செல்வத்தை நல்ல வழியிலே செலவழிப்பேன் என்றார்.

எங்களிடம் இருக்கின்ற பணம் எப்பவும் எங்களிடமே வந்து கொண்டிருக்காது என்பது இதிலிருந்து புரிகிறது. அதற்காக நாங்கள் பணம் சேர்ப்பது பற்றி கவலைப்பட தேவையில்லை. பேசாமல் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தால் போதும் என்று இதற்கு அர்த்தம் கொள்ளக் கூடாது.

முறையான வழியிலே பணம் சேர்க்க வேண்டும். அதை முறையான வழியிலே செலவு செய்ய வேண்டும். அதனால் ஏற்படக் கூடிய மனநிறைவு இருக்கிறது பாருங்கள்... அது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

சொர்க்கத்துக்குப் போறவர்கள் இங்கே இருந்து பணத்தை எடுத்துக்கொண்டு போக முடியாது. ஆனால் எங்களுடைய செல்வத்தை மற்றவர்களுக்குப் பயன்படச் செய்து அதனால் ஏற்படுகின்ற புண்ணியத்தை எடுத்துக்கொண்டு போக முடியும்... இதுதான் ஆன்மீகவாதிகள் சொல்வது.

ஜான் நியூட்டன் என்று ஒருவர் அவர் சொன்னார். நான் எப்பவாவது சொர்க்கத்திற்கு போய் சேர்ந்தால் அங்கே மூன்று அதிசயங்களைப் பார்ப்பேன் என்றார்.

என்ன என்று கேட்டார்கள். நான் யார் யார் இருக்க மாட்டாங்க என்று நினைத்துக் கொண்டிருந்தேனோ... அவர்களிலே சில பேர் அங்கே இருப்பார்கள்... அது ஒரு அதிசயம் என்றார். சரி அடுத்தது என்ன? என்றார்கள். இரண்டாவது அதிசயம் அங்கே இருப்பார்கள் என்று நினைத்த சிலபேர் அங்கே இருக்க மாட்டார்கள். மூன்றாவது பெரிய ஆச்சரியம் என்ன தெரியுமா? என்றார். என்ன என்று கேட்டார்கள். நான் அங்கே இருக்கிறேன் பாருங் கள்... அதுதான் அந்த மூன்றாவது அதிசயம் என்றார்.

# அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

# யாழ்ப்பாணக் கம்பன் விழா-2020

## பெப்ரவரி 28 முதல் மூன்று தினங்கள் நல்லூரில்



பாரதி கிருஷ்ணகுமார்
திரைப்பட இயக்குநர், தமிழ்நாடு.



'கம்பவாரிதி' இ.ஜெயராஜ்



பேராசிரியர் மு.இராமச்சந்திரன்
தமிழ்நாடு

உயர் கம்பனின் புகழ்பாடி நமது தமிழ்மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வளர்க்கும் முயற்சியில் அகில இலங்கைக் கம்பன் கழகம் கடந்த 40 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது. ஆண்டுதோறும் கம்பனின் பெயரால் இயல், இசை, நாட்டிய விழாக்களை கம்பன் கழகம் நடத்தி வருவதை அனைவரும் அறிவர். தற்போது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமாக அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் முயற்சிகள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. கம்பன் கழகத்தின் கம்பன் விழாக்களின் வரிசையில் 2020 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணக் கம்பன் விழா எதிர்வரும் 28, 29, மார்ச் 1 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. இவ்விழாவின் காலை நிகழ்ச்சிகள் நல்லூர் கம்பன் கோட்ட மண்டபத்திலும் மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்வாண்டுக் கம்பன் விழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை 4.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் எம்.பி.பாலகிருஷ்ணன், வி.கே.பஞ்சமூர்த்தி, கே.ஆர்.புண்ணியமூர்த்தி குழுவினரின் மங்கல இசையுடன் இனிதே ஆரம்பிக்கவுள்ளன. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவத் துறைப் பேராசிரிய வண.ஞா.பிலேந்திரன், இஸ்லாமிய மதகுரு மௌலவி எம்.ஏ.பைசர் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பிக்கவுள்ளனர். யாழ்.மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்புக் கம்பன் கழகப் பெருந்தலைவருமான ஜெ.விஸ்வநாதனின் தலைமையில் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தொடக்கவுரையினை ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து நூல் மற்றும் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. தமிழ்நாட்டின் பிரபல இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமாரின் "கம்பன் என்றொரு மானுடன்" எனும் தலைப்பிலான சிறப்புரை அடுத்து இடம்பெறவுள்ளது. நிறைவாக தமிழ் நாட்டுப் பேராசிரியர் மு.இராமச்சந்திரன் தலைமையில் இரா.செல்வவடிவேல், ந.விஜயசுந்தரம், ஸ்ரீ.பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளும் இலக்கிய ஆணைக்குழு எனும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

### நூல் வெளியீடும், இறுவெட்டு வெளியீடும்

இந்நிகழ்வில் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் தொடக்க காலப் பதினைந்தாண்டு வரலாற்றுப் புகைப்படத் தொகுப்பும் கொழும்புக் கம்பன் விழா வெள்ளி விழா மலரும் 2019 இல் இடம்பெற்ற யாழ்ப்பாணக் கம்பன் விழா இறுவெட்டும் 2019 கொழும்பில் இடம்பெற்ற நாட்டிய வேள்வி இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. இவற்றின் முதற்பிரதிகளை கு.சிவஞானசுந்தரம், எஸ்.வி.எம்.குணரட்ணம், ச.சிவகுமார், க.அருள்நேசன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

### விழாவில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டு அறிஞர்கள்

இவ்வாண்டு யாழ்ப்பாணக் கம்பன் விழாவில் கலந்து கொள்ளவென தமிழ்நாட்டின் புகழ்பெற்ற அறிஞர்கள் இருவர் வருகை தரவுள்ளனர். ஆங்கிலத்துறைப் பேராசிரியரான மு.இராமச்சந்திரன், பிரபல திரைப்பட இயக்குநரான பாரதி கிருஷ்ணகுமார் ஆகியோரும் மூன்று நாள் விழா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### விழாவில் கலந்து கொள்ளும் நம்நாட்டு பிரமுகர்கள்

பாராளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன், இந்தியத் துணைத் தூதுவர் ந.பாலச்சந்திரன், வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன், யாழ்ப்பாண சின்மயாமிஷன் தலைவர் சுவாமி சிதாகாசானந்தா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, வலம்புரி பத்திரிகை நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், நீராவிப் பிள்ளையார் ஆலய அறங்காவலர் வை.இரகுநாத முதலியார் தம்பதியர், வைத்திய நிபுணர் ஏ.சிறீதரன் தம்பதியர், மனவளக் கலைப் பேராசிரியர் சி.முருகானந்தவேல், சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன் தம்பதியர், கிழவன்காடு கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் ஆகிய நம் நாட்டுப் பிரமுகர்களும் இவ்வாண்டு விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

### கம்பன் விழா நிகழ்ச்சிகள்

இவ்வாண்டுக் கம்பன் விழாவில் மங்கல இசை, இலக்கிய ஆணைக்குழு, இலக்கியப் பேருரை, சுழலும் சொற்போர், பட்டிமண்டபம், சிந்தனை அரங்கம், வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

### விழாவில் கலந்து கொள்ளும் நம்நாட்டு அறிஞர்கள், கலைஞர்கள்

இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ், கலாநிதி ஆறு.திருமுருகன், கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் தி.வேல்நம்பி, சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், வலம்புரி ந.விஜயசுந்தரம், கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், ந.ஜங்கரன், ம.கோசலை, பராரமேஸ், சி.கேசவன், கு.பாலசண்முகன், ம.தயாபரன், சி.சிவாம்சன், அ.அமிர்தலோஜனன், அ.அமிர்தசிந்துஜன், ஜெ.மதுஷிகன், அ.சுகன்யா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

### மங்கல இசை

விழாவின் மாலை நிகழ்ச்சிகளில் தினமும் நம் நாட்டின் பிரபல மங்கல இசைக்கலைஞர்களின் நாதஸ்வரக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளன. முதலாம் நாளில் எம்.பி.பாலகிருஷ்ணன், வி.கே.பஞ்சமூர்த்தி, கே.ஆர்.புண்ணியமூர்த்தி குழுவினரதும், இரண்டாம் நாளில் பி.ரஜீந்திரன் குழுவினரதும், மூன்றாம் நாளில் எஸ்.பால முருகன் குழுவினரதும் நாதஸ்வரக் கச்சேரிகள் நடைபெறவுள்ளன.

### புத்தக, சி.டி.விற்பனை

விழா நாட்களில் மண்டப வாயிலில் கம்பன் கழகத்தால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் சொற்பொழிவுகளின் இறுவெட்டுக்களும் இதுவரை நடைபெற்ற கம்பன் விழாக்களின் இறுவெட்டுக்களும் விற்பனைக்காக வைக்கப்படும்.

### இரசிகர்களுக்கு வேண்டுகோள்

கம்பன் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர ஒழுங்கின்படி நடத்தப்படவுள்ளதால் இரசிகர்கள் குறித்த நேரத்தில் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். காலை நிகழ்ச்சிகள் நல்லூர் கம்பன் கோட்ட மேல் மண்டபத்தில் சரியாக 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறும். பின்னர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டோருக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் மதிய உணவு விருந்தளிக்கப்படும். மாலை நிகழ்ச்சிகள் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் மாலை 4.30 மணி முதல் இரவு 9.00 மணிவரை நடைபெறவுள்ளன. கழக முகவரிப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டோருக்கு அழைப்பிதழ்கள் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மற்றைய தமிழ் இரசிகர்களுக்கு ஊடகங்கள் மூலம் விழாவிற் கான அழைப்பினைக் கம்பன் கழகம் மனமகிழ்வுடன் விடுத்துள்ளது. (ஜ)




ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் கால்கோள் விழா அண்மையில் இடம் பெற்றது.

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

05

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### சிறிய கைத்தொழில்கள்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் வியாபார நிலைமைகளை மேம்படுத்துவ்தற்காக நடவடிக்கை எடுப்பதோடு அவற்றின் போட்டித் தன்மை, தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி, உற்பத்தித்திறன் மேம்பாடு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஒப்பீட்டு நயத்தினை அடைந்து கொள்வது பற்றிய அறிவூட்டல்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். மரபு ரீதியான உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை தொடர்புகளை விருத்தி செய்தல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதனூடாக ஊக்குவிப்பளித்தல், இத்துறையின் அபிவிருத்திக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய கைவினை கவுன்சில் மற்றும் வர்த்தக மன்றங்கள் மற்றும் நுண்கடன் வசதியளிப்பவர்களுடன் சிறப்பான தொடர்புகளானது இன்றியமையாததாகும். வியாபார முயற்சிகளின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு தனியார்த்துறையின் பங்குபற்றலானது ஊக்குவிக்கப்படல் வேண்டும். மாகாணங்களின் சிறிய கைத்தொழில் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்படும் பயிற்சி நெறிகளின் இறுதியில் வழங்கப்படும் சான்றிதழ்களானது தேசிய தொழிற்தகைமை (NVQ) சட்டகத்திற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

### கிராமிய மின்மயமாக்கல்

தேசிய மின் கட்டமைப்பில் இருந்து கிராமப்புறங்களுக்கான மின் விநியோகத்தை விரிவுபடுத்தல் அல்லது தேசிய மின் கட்டமைப்பில் இருந்து மின் வசதியினைப் பெற்றுக்கொள்ள முடியாத அவ்வாறான பிரதேசங்களுக்கு சாத்தியமான மாற்று மின் சக்தி மூலங்களை அறிமுகம் செய்வதற்கு இந்நிதி பயன்படுத்தலாம். நிதியானது தேசிய கட்டமைப்பில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும் பொதுவான விரிவாக்கத்திற்கல்லாமல் தனிப்பட்டோருக்கான இணைப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கு பயன்படுத்த முடியாது. மாற்று மூலங்களினால் மின் வசதியினை பெற்றுக் கொடுக்குமாயின் பொருளாதார ரீதியான மின் வழங்கல் தொடர்பான விழிப்புணர்வூட்டல், நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நிலைபேறான சக்திவள அதிகார சபையுடன் உரிய ஒருங்கிணைப்பினைப் பேணுதல் வேண்டும்.

### சுற்றுலா

அரசாங்கக் கொள்கை இலக்கானது "இலங்கையை சுற்றுலாவுக்கான உலகின் மிகச் சிறந்த பொக்கிஷமான தீவாக மாற்றுவதாகும்" தோன்றிவரும் புதிய போக்குகளுக்கு அமைய சுற்றுலாத்துறையானது இயற்கை சுற்றுலா, சாகச சுற்றுலா, விவசாய சுற்றுலா, கலாசார சுற்றுலா, விளையாட்டு சுற்றுலா, சூழல் சுற்றுலா எனப் பல் வகைப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக கிராமங்களில் காணப்படும் பாரம்பரியக் கைத்தொழில்களை மையமாகக் கொண்டு "மட்பாண்ட சுற்றுலாக் கிராமம்", "கைவினை சுற்றுலாக் கிராம்", "தும்புக் கைத்தொழில் சுற்றுலாக் கிராம்" போன்ற கருப்பொருட்களில் சுற்றுலாத் துறையானது ஊக்குவிக்கப்படலாம். பிரதான தந்திரோபாயங்களானது தொடர்புபட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். இத்துறையில் காணப்படும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு இளைஞர்களுக்கு வசதிகளை செய்து கொடுத்தல், மாகாணத்தில் காணப்படும் இதுவரை குறைந்தளவிலேயே அறியப்பட்ட சுற்றுலாத் தளங்களை அடையாளம் காணல், பார்வையாளர் வசதிகளான பார்வை மண்டபம், வாகன தரிப்பிட வசதிகள், சேவைப் பிரதேசங்கள், மலசல கூட வசதிகள் மற்றும் கடற் குளியலுக்கு உகந்த இடங்களில் நன்னீர் குளியலறை வசதிகள் போன்ற நடவடிக்கைகளை அமுல்படுத்தலாம்.

### உள்ளூராட்சி சபைகள் சம்பந்தமாக நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள்

#### உள்ளூராட்சி வீதிகள்

உள்ளூராட்சி வீதிகள் உரிய காலத்தில் பராமரிப்பு மற்றும் செயற்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். உள்ளூராட்சி வீதி வலயமைப்பானது நிலைபேறான முறையில் பராமரிக்கக் கூடிய வகையில் சூழ்நிலைகளுக்கு் ஏற்ப முழுமையாக அல்லது பகுதி அளவில் கொங்கிறீட் அல்லது தார் இடப்பட்டு புனர்நிர்மாணம் செய்யலாம்.

#### சமூதாய நீர் வழங்கல் திட்டங்கள்

பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்நிதியானது பயன்படுத்தப்படல் வேண்டும். புதிய சமுதாய நீர் வழங்கல் திட்டங்களை வடிவமைப்பு செய்யும் போதே முறையான சாத்திய வள ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். குடிநீர் வசதியினைப் பெற்றுக் கொடுக்க முன்பு நீரின் தரமானது, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமான பொதுக் கிணறுகள் மற்றும் குளிக்குமிடங்கள் வழக்கமாக பராமரிக்கப்பட்ட அவை சுத்தமாக பேணப்படுவது உறுதி செய்யப்படல் வேண்டும்.

#### கழிவு முகாமை

கழிவுகளை மீள் சுழற்சி செய்தல், கொம்போஸ்ட் உரம் தயாரித்தல் மற்றும் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியாக பெறுமதியான பொருட்களை உற்பத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். கழிவுகளை அவை உருவாகும் இடத்திலேயே வகைப்படுத்தப்பட்டு அழியக்கூடிய கழிவுகளை அகற்றுதல் அல்லது தமது வீட்டுத் தோட்டங்களில் இடவசதி காணப்படுமாயின் கொம்போஸ்ட் உற்பத்தி செய்வதற்கும் மக்களுக்கு அறிவுறுத்துதல் இன்றியமையாததாகும்.


ஏனைய உள்ளூராட்சி சேவைகள், நூலகங்கள், பிணங்களை எரியூட்டும் இடங்கள், பேருந்து நிலையங்கள், வ்ராந்த சந்தைகள், சிறுவர் பூங்காக்கள் போன்ற மேற்கூறப்பட்ட உப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உட்படாத உள்ளூராட்சி துறையின் கீழ்வரும் விடயங்கள் இதன் கீழ் உள்ளடங்கும்.

#### நெகிழ்வான நிதி ஒதுக்கீடு

ஆரம்ப திட்டத்தில் உட்படுத்தப்படாத அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியானது இந்த வகையின் கீழ் ஒதுக்கப்படும். விசேட தேவைப்பாடுகளைக் கொண்ட கிராமங்களுக்கான கொடைகள் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமையின் காரணமாக கிராமங்களின் வாழ்வாதாரங்களுக்கு வசதிகளற்ற அபிவிருத்தியில் பின்தங்கிய கிராமங்களை அடையாளம் காணுமாறு மாகாண அதிகாரிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்படும் கருத்திட்டங்களின் மூலம் அவ்வாறான அசாதாரன நிலைமைகளை தவிர்ப்பதற்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். தேசிய மற்றும் மாகாண மட்ட ஊடகங்கள் மூலம் வெளிக் கொணரப்பட்ட பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் அவற்றின் நியாய பரிவர்த்தனைத் தன்மையானது ஆராயப்பட்ட பின்பு நிதியீட்டம் செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படலாம்.

### 13 ஆம் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள்

1987 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 13 ஆம் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களானது மாகாண சபைகளின் அதிகாரம் பகிரப்பட்ட விடயப்பரப்பிற்கு உட்படுகின்றது. உள்ளூராட்சி மன்ற விடயப்பரப்பானது பின்வரும் மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்ற மூன்று சட்டரீதியான நிறுவனங்களாக செயற்படுகின்றது. தற்போது நாட்டில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் காணப்படுகின்றன.




உள்ளூராட்சி மன்றங்களே நாட்டில் காணப்படுகின்ற மூன்றாவதும் மற்றும் மிகவும் குறைந்த மட்ட நிலையிலுள்ள அரச ஆட்சி முறையாகும். எவ்வாறாயினும் அரசியலமைப்பு திருத்தங்களானது உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சட்டவாக்கம், ஆணைகள் மற்றும் சட்டங்களினூடாக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது உறுதிப்படுத்தப்படுகின்றது.

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டமானது அதன் அதிகாரங்களைப் பட்டியல் படுத்துகின்றது. இக்கட்டளைச் சட்டத்திற்கு 40 இற்கும் மேற்பட்ட திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஒரு நகர பிரதேசம் அதனது சனத்தொகை, வருமானம், வீதி வலையமைப்பு, கைத்தொழில் மயமாக்கல் மற்றும் வர்த்தக மயமாக்கல் என்பவற்றின் அடிப்படையில் மாநகர சபையாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படலாம்.

நகர சபைகளின் அதிகாரங்களானது 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கட்டளைச் சட்டத்தில் 44 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளின் கடமைகளை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

(அ)சபைக்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதன் முகாமைத்துவத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அனைத்து பொது வீதிகள் மற்றும் திறந்த வெளிகள் என்பவற்றை பராமரிப்பு செய்தல் மற்றும் சுத்தப்படுத்துதல்.

(ஆ)அனைத்து தனிப்பட்ட வீதிகளையும் சுத்தம் செய்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தலை உறுதிப் படுத்தல்.

(இ)சபைகளின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களின் வீதிகளை திட்டமிட்டு விரிவுபடுத்தல், பொது திறந்த வெளிகளை உருவாக்குதல் மற்றும் பொது வசதிகளை மேம்படுத்தி அப்பிரதேசங்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்தல்.

(ஈ)அனைத்து தொல்லைகளையும் தவிர்த்தல் (2) கட்டளைச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள மற்றும் பொதுமக்களின் சௌகரியம், சொகுசு மற்றும் தேவையான பொது வசதிகளை (வருமானக் கிடைப்பனவுக்கேற்ப) உருவாக்கி மேம்படுத்தல்.

(உ) பொது சுகாதார வசதிகளை ஊக்குவித்தல், நலன்கள் மற்றும் வசதிகள் மற்றும் சபைகளின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களின் துப்புரவு மற்றும் பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

பிரதேச சபைகளினது அதிகாரமானது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் முன்பு காணப்பட்ட பட்டினசபைகள் மற்றும் கிராமச் சபைகளுக்கு பதிலாக உருவாக்கப்பட்டதாகும். பிரதேச சபைகளானது பொதுச் சுகாதார வசதிகள் பொதுப் பயன்பாட்டு வசதிகள் மற்றும் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேச மக்களின் சொகுசு நலன் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பொதுவசதிகளைப் பாதுகாத்தலுமாகும்.

உள்ளூராட்சி மன்ற சட்டத்தின்படி எந்தவொரு உள்ளூராட்சி அதிகார சபையும் தனது நிதித் தேவைகளுக்காக ஒரு உள்ளூராட்சி அதிகாரசபை நிதியினை உருவாக்கலாம். இது மாநகர சபை நிதி, நகர சபை நிதி, மற்றும் பிரதேச சபை நிதியாக அமையலாம். இவ் உள்ளூராட்சி அதிகார சபை சட்டமானது இச்சபைகளின் தேவைகளையைப் பூர்த்தி செய்யக்கூடிய வருமானத்தினை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கின்றது.

### மாகாண சபைக்கு நிதி ஆணைக்குழுவின் பொதுவான வழிகாட்டல்கள்

1. முறையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை தவிர்க்கும் முகமாக பிரதான துறைகளுக்கான முதன்மை திட்டங்களானது தயாரிக்கப்படல் வேண்டும்.

2. வலுவற்ற சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அமைவிட / பிராந்திய நன்மை என்பவற்றை உறுதி செய்யும் வகையில் வளங்களை அடையாளம் காணும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வ்ரவு-செலவுத்திட்டத்திற்கு அமைவாக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை குறிப்பிட்ட ஆண்டு நிதியாண்டிற்குள்ளேயே பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்படல் வேண்டும்.

4. அபிவிருத்தித்திட்டத்தின் அமுலாக்கலின் போது அரசாங்க பெறுவனவு நடைமுறைகளை பின்பற்றுவது மாகாண அதிகர்ரிகளின் பொறுப்பாகும்.

5. கிடைக்கப்பெறும் நிதியானது வரையறுக்கப்பட்டுள்ளதனால், வளங்களை உச்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் விளைவுகளின் அடிப்படையில் முன்னுரிமைப் படுத்தப்படல் வேண்டும்.

(தொடரும்)

# தவக்காலம் இன்று ஆரம்பம்




ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்-
ஊடகக்கற்கைநெறி ஆசிரியர்.

பருவங்களின் மாற்றத்தை வைத்து காலங்களை நாம் வகைப் படுத்துகின்றோம். இவ்வாறு நோக்கும்போது ஒவ்வொரு வருடமும் சில நாட்களில் மிகநீண்ட பகல் பொழுது உள்ளது என்றும் சில நாட்களில் மிகநீண்ட இரவுப் பொழுது உள்ளது என்றும் அறிய முடிகிறது. ஆனால் உண்மையில் ஆனிமாதம் 3ஆம் திகதி மிக நீண்ட பகல்பொழுது வருகிறது. மார்கழி 23ஆம் திகதி மிக நீண்ட இரவுப்பொழுது வருகிறது. பங்குனி 23 ஆம் திகதியும் புரட்டாதி 23 ஆம் திகதியும் பகல்பொழுதும் இரவுப் பொழுதும் சம அளவு நேரங்களை கொண்டதாக வருகின்றது. இது பருவங்களின் மாற்றத்தை குறிக்கிறது.

கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவை நோக்கிய தவக்காலப் பயணம் நாற்பது நாட்களை கொண்டது. ஆண்டவரின் நாள் என அழைக்கப்படும் ஞாயிற்றுக் கிழமைகளை தவிர்த்து திருநீற்றுப்புதனுடன் ஆரம்பித்து உயிர்த்த ஞாயிறுக்கு முதல்நாளான புனித சனிக்கிழமையுடன் முடிவடையும் தவக்காலம் நாற்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இத்திருநீற்றுப்புதன், சாம்பல் நாள் என்று 6ஆம் நூற்றாண்டில் கொண்டாடப்பட்டது. திருத்தந்தை கிரகோரியாரின் காலத்தில் தான் திருநீற்றுப்புதன் அன்று நெற்றியில் சாம்பல் பூசும் பழக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

குரு ஆல்பெரிக் என்பவர் (952-1020) எழுதிய "புனிதர்களின் வாழ்வில்" என்ற புத்தகத்



தில் திருநீற்றுப் புதனைப் பற்றிய குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன. தவக்காலத்தில் முதல் நாள் திருநீற்றுப் புதனாகத்தான் இருக்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஆனால் திருநீற்றுப் புதன் வரும் திகதி ஒவ்வொரு வருடம் மாறக்கூடியது.

ஏனென்றால் இதனுடைய திகதி உயிர்ப்புப் பெருவிழாவை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது.

### உறவை புதுப்பிக்க வருவதே தவக்காலம்

பைபிளில் உள்ள 2 சாமுவேல் புத்தகம் 13 அதிகாரம் 19 வசனம்: "தாமார் தன் பாவத்திலிருந்து மனம் திரும்பும் பொருட்டு தன் தலைமீது சாம்பல் தூவினாள். தன் மீது இருந்த பலவண்ண ஆடையைக் கிழித்தாள்". அவ்வாறே எஸ்தா புத்தகம் 4 அதிகாரம் 1 வசனம்: "மொர்தக்காய் தம் ஆடையைக்கிழித்து, சாக்கு உடை அணிந்து, சாம்பல் பூசிக் கொண்டு, வெளியே நகரின் மையத்திற்கு சென்று ஓலமிட்டு, மனம் கசிந்து அழுதார்".

இவை மனம்திருப்பலுக்காக சாம்பல் பயன்படுத்தப்பட்டதன் எடுத்துக்காட்டுக்கள் சில.

எனவே இன்று எமது நெற்றியில் இச்சாம்பல் பூசப்படுவது பாவங்களுக்கு மன்னிப்புக்கேட்டு மனம் மாறவேண்டும். தபக் கிருபைகள் செய்து இறைவனுடன். புதிய உறவுகளை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றது. இறை-மானிட உறவை புதுப்பிக்க வருவதே தவக்காலம். இவ்வுறவை புதுப்பித்துகொள்ள இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே உரையாடல் செய்ய தவக்காலம் நம்மை அழைக்கின்றது.

நமது வாழ்வில் பல்வேறு வழிகளில் நம்மோடு உறவாடிய இறைவன், தன் பாடுகளின் வழியாக, நம்மோடு கொண்டுள்ள உறவை உறுதிப்படுத்த நமக்கு அழைப்பு விடுக்கின்ற காலமே தவக்காலம். இறைவாக்கினர்கள் வழியாக பேசிய இறைவன் நீதித் தலைவர்-அரசர்கள் வழியாக செயற்பட்டு தொடர்ந்தும் மானிட இனத்தின் இடறிய பாதையைச் சமன்செய்து அன்புறவை கட்டியெழுப்ப இறுதியாக மேரிமாதா வழியாக தன் அன்பு மகனை மானிடனுக்காகத் தந்தார்.

தவக்காலம் நமக்கு உறவை வளர்க்க நமக்கு தரப்படும் உறவின் அற்புதமான காலமாகும். நல்ல ஆரோக்கியமுள்ள சமூகத்தை கட்டியெழுப்புவதில் அக்கறை கொள்வோம். நம்முடைய நல்ல மாதிரிகையின் வழியாக புதிய சமூகத்தைக் கட்டியெழுப்புவோம். உறவிலே இறைவனை உயிர்ப்பிக்கச் செய்து, தெய்வ தரிசனம் பெறுவோம். தவக்காலம் - உறவின் காலம். உறவின் உயிர்ப்பின் தளிர் நம்மிலே புதிய தசாப்தத்தை தர இத்தவக்காலத்தைப் பயன்படுத்துவோம்.

உறவுகளை மீண்டும் அன்பால் கட்டி இறைவன் அருளும் பாவ மன்னிப்பை பெற எம்மில் திருநீற்றை ஏற்று இத் தவக்காலத்தின் ஊடாக மனம் மாறிய மைந்தர்களாக கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை அர்த்தமுள்ளதாக கொண்டாட ஆயத்தமாவோம்.

# தீர்க்க தரிசனம் இல்லாத தலைமைகளால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்

## அமைச்சர் டக்ளஸ் ஆதங்கம்


(மாளிகாவத்தை)

தீர்க்க தரிசனமோ அல்லது மக்கள் நலன்சார்ந்த திட்டங்களையோ கொண்டிராத தமிழ் தலைமைகளைத் தெரிவு செய்தமை காரணமாக தமிழ் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு நிர்வாக சிக்கல்களுக்கும் முகம்கொடுக்கும் துர்ப்பாக்கியம் எற்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சிற்கு நேற்று முன்தினம் சென்ற முல்லைத்தீவு மாவட்ட சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாவட்டத்தில் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரின் அவதானத்திற்கு கொண்டு வந்தனர்.

குறிப்பாக அரச நிறுவனங்களின் வினைத்திறன் அற்ற செயற்பாடு காரணமாக தமது மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பெருந்தொகை நிதி மீண்டும் திறைசேரிக்கு திரும்புவதாகவும் முல்லைத்தீவு பிரதேச மக்கள் பிரதிநிதிகளால் அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், அரச திணைக்களங்கள் மீதோ அரசாங்க அதிகாரிகளின் மீதோ குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அரசியல் தலைமைத்துவங்களால் சரியான வழிகாட்டல் வழங்கப்படுமாயின் அரச திணைக்களங்களை வினைத்திறனுடன் செயற்படுத்த முடியும் எனவும்



தெரிவித்தார்.

எனவே, தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற அசௌகரியங்கள் அனைத்திற்கும் தவறான தெரிவுகளே காரணம் என்று தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்திலேனும் மக்கள் சிந்தித்து சரியானவர்களை தெரிவு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (இ-7)

# ஹொரணயில் துப்பாக்கிச்சூடு ஆட்டோ சாரதி உயிரிழப்பு

(ஹொரண)

ஹொரண-இலிம்ப பகுதியில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், சாரதி ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குறித்த துப்பாக்கிச் சூட்டில் ஆட்டோ சாரதியான 32 வயது நபரொருவரே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவரால் இவ்வாறு துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. இச் சம்பவம் தொடர்பாக ஹொரண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# மஹோற்சவம் நாளை

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு சாந்தா தோட்டம் அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன் மணி) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 27 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. இதில், எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மாசி மகத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (இ-5)



வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இயங்கும் முன்பள்ளிச் சிறார்களுக்கு இலவச சத்துணவு வழங்கும் திட்டம் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கிருபானந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன் உரையாற்றுவதையும் முன்பள்ளி சிறார்களிடம் விருந்தினர்கள் சத்துணவு பொதிகளை கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# கூட்டமைப்பும் கூட்டணியும் நட்பு கட்சிகள் என்ற முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தும்

## வேலுகுமார் எம்.பி.விளக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் பகைமைக் கட்சிகள் அல்ல. இரண்டும் நட்புக் கட்சிகள். எங்களுக்கு இடையில் இருக்கக்கூடிய ஒருசில முரண்பாடுகள் நட்பு முரண்பாடுகள். அவை பகைமை முரண்பாடுகள் அல்ல. எல்லா தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேருதல் என்பது நல்ல ஒரு கனவு.

ஆனால், நடைமுறை சிக்கல்கள், வடக்கு-தெற்கு அரசியல்கள நிலவரங்கள், அரசு–எதிரணி முரண்பாடுகள் காரணமாக எல்லா தமிழ்க் கட்சிகளும் ஒரே அணியாக ஒன்றுசேர முடியாது. ஆகையால் எங்கெங்கே ஒருமித்து செயற்பட முடியுமோ, அங்கெல்லாம் நாம் ஒருமித்து செயற்படலாம். கூட்டமைப்புக்குள் மூன்று கட்சிகளும் கூட்டணிக்குள் மூன்று கட்சிகளும் உள்ளன. இந்நிலையில் நாம் ஒன்று சேர்ந்து செயற்பட்டால் பிரதான ஆறு தமிழ்க் கட்சிகள் இயன்ற மட்டங்களில் ஒன்றுசேர்ந்து செயற்படுகின்றன என்று அர்த்தமாகும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் கண்டி மாவட்ட எம்.பியுமான வேலுகுமார் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானத்தின்படி வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் போட்டியிடுவதானால், அது தொடர்பில் எமது ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்ட ணித் தலைவர் மனோ கணேசனுடன் பேசித் தீர்மானிப்போம் என கூட்டமைப்பின் பேச்சாளரும் தமிழரசுக் கட்சியின் பிரமுகருமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.கூறியுள்ளமை தொடர்பில் வேலுகுமார் எம்.பி.மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சில மாவட்டங்களில் போட்டியிடுவது தொடர்பில் நாமும் ஆலோசித்து வருகின்றோம். அதேபோல் கூட்டமைப்பும் சில தென்னிலங்கை மாவட்டங்களில் போட்டியிடுவது தொடர்பில் ஆலோசிக்கிறது. இந்த பரஸ்பர போட்டி, தமிழ் வாக்குகளைச் சிதைத்து விடக்கூடாது என்பதில் இரு சாராரும் கவனமாக இருக்கின்றோம். எனவே எந்த அடிப்படையில் நாம் புரிந்துணர்வுடன் செயற்படுவது என நமது இரண்டு அணிகள் மத்தியில் பேச்சுக்கள் இடம்பெறலாம்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி, எமது தலைவர் மனோ கணேசனுடன் தொடர்பு கொண்டுள்ளார். இன்னும் சில தினங்களில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்காவை எதிர்ப்பது போல நடிக்கும் ராஜபக்ஷக்கள் குடியுரிமையை ரத்து செய்வார்களா?

## ஜே.வி.பி.கேள்வி

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவை எதிர்ப்பது போல நாட்டு மக்கள் முன் நடிக்கும் ராஜபக்ஷக்கள் அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்வார்களா? என ஜே.வி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.சந்திரசேகரன் கேள்வியெழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த அரசாங்கத்தால் அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை நாட்டுக்குப் பாரிய அழிவைத் தரும் என்ற ராஜபக்ஷக்கள் தற்போது பொதுமக்களின் அபிப்பிராயத்தை கேட்பதாக நாடகமாடுகின்றனர்.

ராஜபக்ஷக்களின் சகபாடிகளான உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச போன்றோர் மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமானால் இலங்கை அமெரிக்காவின் கொலனியாக மாற்றப்படும் எனவும் இதுவொரு தேச விரோத நடவடிக்கை எனவும் கூக்குரல் இட்டனர்.

இந்நிலையில் மதவாதத்தையும் இன வாதத்தையும் வெளிப்படுத்தி ஆட்சிப்பீடம் ஏறிய ராஜபக்ஷக்கள் தற்போது அமெரிக்காவுக்கு அடிபணிந்த நிலையில் மக்கள் அபிப்பிராயத்தை கேட்போம் என்கின்றனர்.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குடும்பம், பசில் ராஜபக்ஷ குடும்பம் மற்றும் டளஸ் அழகப்பெரும ஆகியோர் அமெரிக்கப் பிரஜைகளாகவே இன்றும் வலம் வருகின்றனர்.


போர்க் குற்றவாளியாகக் கருதப்படும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா தனது நாட்டுக்குள் நுழைவதற்குத் தடை விதித்தமையையும் இலங்கையை அடிபணிய வைக்கும் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது.

எனவே அமெரிக்காவால் இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களை கடந்த ஆட்சியில் வெளியில் நின்று இனவாதம் பேசி எதிர்த்தோர் வாக்களித்த மக்களுக்காக தங்களின் அமெரிக்கக் குடியுரிமைகள் முதலில் துறக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1987

Search for people, places and things

### யதீசன்



இரண்டு வயது ஆகுவதற்கு முன்பே பேசுவதற்கு கற்றுக் கொள்கின்றோம்

ஆனால்,இருபது வயது ஆனாலும் என்ன பேச வேண்டும் என்பதை கற்றுக் கொள்ள முடிவதே இல்லை...!

### மலர்





### வாகீஸ்




### தனுசியா

லட்டு உடைஞ்சிருச்சே என்று பீல் பண்ணாம பூந்தி கிடைச்சிருக்கே என்று சந்தோசப் படுங்கள்




### அனந்




### துஷ்யந்தி

முக வெளிப்பாடு



உயிர் நண்பன் நம்மள விட்டுட்டு வேறு ஒருத்தனோட கதைக்கும் போது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




புதுச்சேரி புதுவைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 6,7ஆம் திகதிகளில் இடம்பெற்ற 14ஆவது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டில் முதல் நாளன்று புதுவை முதலமைச்சர் வே. நாராயணசாமியால் யாழ். பல்கலைக்கழக தகைசார் பேராசிரியர் சமாதிலிங்கம் சத்தியசீலனின் தமிழ் கல்விச் சேவையைப் பாராட்டி "உலகத்தமிழ் மாமணி" என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# 4கிலோ ஹெரோயினுடன் 6 பேர் கைது

(தெஹிவளை)

தெஹிவளை பிரதேசத்தில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியக உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் இரவு கிடைத்த தகவல்களின் படி சோதனை மேற்கொள்ளப்பட்ட போது 4 கிலோ கிராம் ஹெரோயினுடன் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை அவர்கள் பயணித்த இரண்டு கார் களும் பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேக நபர்கள் 26,28 வயதுடையவர்களாவர். இவர்களுள் 3 மாலைதீவு நாட்டவர்களும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பிள்ளையான் மீதான வழக்கு விசாரணை மீள ஒத்திவைப்பு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணசபை முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.என்.அப்துல்லா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது மார்ச் 17ஆம் திகதி வரை வழக்கினை ஒத்தி வைத்தார்.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சித்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது தேவாலயத்திற்குள்ளேயே வைத்து அடையாளம்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 3 கிலோ மாவா போதைப்பொருளுடன் இருவர் கைது

(தெஹிவளை)

தெஹிவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு 7.30 மணியளவில் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் படி சோதனை மேற்கொள்ளப்பட்ட போது புகையிலை கலந்த மாவா எனப்படும் போதைப்பொருள் 3 கிலோகிராம் 875 கிராமுடன் சந்தேகநபர் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் 21,49 வயதுடைய தெஹிவளை மற்றும் மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (இ-7)

# வீதி விபத்தில் சிக்கி மூவர் உயிரிழப்பு!

(பிலியந்தலை)

பிலியந்தலைகொட்டுவானை வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பிலியந்தலையில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிளின் பின் சக்கரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்ற பெண் காயமடைந்த நிலையில் களுபோவிலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மரணித்தவர் 58 வயதுடைய ஹெண்டிகம வீதி ,பிலியந்தலையைச் சேர்ந்தவராவார். மேலதிக விசாரணைகளை பிலியந்தலைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

குடாவய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்லவாய கனமல்வில வீதியில் நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் ஆர். 28 ஆவது சந்தியில் தனமல்வில நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து எதிர்த்திசையில் பயணித்த காருடன் மோதி விபத்து இடம் பெற்றது.

விபத்தில் காயமடைந்த காரின் சாரதி மற்றும் மூன்று பெண்களும் தெகிகலை சந்தியில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் காரின் சாரதி உயிரிழந்தார். இரு பெண்களும் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மரணித்தவர் 35 வயதுடைய றந்தனிகொடயாய, சதபாணாலை பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார். விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை குடாஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கொடகவெள பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரத்தினபுரி ,எம்பிலிப்பிட்டி வீதி நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் பலவின்ன பிரதேசத்தில் கொடகவெலவில் இருந்து பல்லேபொத்த நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி மதிலுக்கு அருகில் இருந்த கல்லுடன் மோதி விபத்து இடம் பெற்றது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிளின் சாரதி கொடகவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். மரணித்தவர் 23 வயதுடைய கப்புகென்தென்ன பலவின்ன கொடகவில பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார். மேலதிக விசாரணைகளை கொடகவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ

# யாழ்ப்பாணம்-சென்னை இடையே தினசரி விமான சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக சென்னை- யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இடையே வாரத்தில் மூன்று சேவைகளை வழங்கி வந்த அலையன்ஸ் எயார் இந்திய விமான நிறுவனம் நாளை-27 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் தினமும் யாழ்ப்பாணம் சென்னை இடையே இருவழி விமான சேவைகளைத் திட்டமிட்டுள்ளதாக யாழ். வணிகர் கழகத்தின் உபதலைவர் இ. ஜெயசேகரன் தெரிவித்தார்.

தினசரி சென்னையிலிருந்து முற்பகல் 10.45 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டு வரும் அலையன்ஸ் எயார் விமானம், நண்பகல் 12.45 மணியளவில் மீண்டும் சென்னை நோக்கிப் புறப்படும் எனவும் தெரிவித்தார். (இ-10-18)

# விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடல்

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் கல்விகற்று 2019 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களில் இரண்டாம் தடவை பாடசாலையூடாக க.பொ.த உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் பரீட்சை விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடுவதற்காக நாளை 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

# ராஜகிரியவில் பாரிய தீ விபத்து

(ராஜகிரிய)

ராஜகிரியவில் உள்ள சதுப்பு நிலத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

பத்தேகமுவ - ராஜகிரிய வீதியில் பெரேரா மாவத்தவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

இந்நிலையில் தீயை அணைக்க நான்கு தீயணைப்பு இயந்திரங்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டதாக தீயணைப்பு அதிகார சபை தெரிவித்தது.

மேலும் இலங்கை விமானப் படையின் பெல் 212 உலங்கு வானூர்தியும் இந்த தீ விபத்தை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# திடீர் தீ விபத்து

(ஊருபொக்க)

ஊருபொக்க பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹின்னலிய பிரதேசத்தில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்தில் நேற்றுக் காலை திடீர் தீ விபத்து இடம் பெற்றுள்ளதாக ஊருபொக்க பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிஸார் மற்றும் பிரதேச மக்களுடன் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததுடன், தீயினால் வனம் சேதமடைந்துள்ளதுடன் எவ்வித உயிர்ச் சேதமும் இடம் பெறவில்லை.


தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. மேலதிக விசாரணைகளை ஊருபொக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 140 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 130 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 280 | 140 | 150 |
| தக்காளி | 150 | 120 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 80 | 120 |
| கோவா | 120 | 130 | 150 | 130 | 140 |
| கரட் | 160 | 150 | 280 | 250 | 250 |
| பூசணி | 60 | 90 | 60 | 70 | 120 |
| புடோல் | 80 | 100 | 90 | 90 | 120 |
| வாழைக்காய் | 60 | 100 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 350 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 190 | 180 | 140 | 260 | 200 |
| பாகற்காய் | 150 | 120 | 250 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 80 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 240 | 320 | 250 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 200 | 90 | 120 |
| கறிமிளகாய் | 150 | 180 | 320 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 550 | 250 | 400 |
| போஞ்சி | 160 | 120 | 200 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 160 | 130 | 120 |
| கீரை-1பிடி | 50 | 35 | 80 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 20 | 150 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 45-60 | 52 | 40-70 |
| இராசவள்ளி | 160 | 140 | 400 | 150 | 160 |
| வெங்காயப்பூ | 240 | 100 | — | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | — | 30 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 15 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | - | 80 | 100 | 100 |




# அறிவுகெட்ட சிங்கமும் அறிவுள்ள முயலும்



ஒரு காட்டில் உடல் கொழுத்து பலம் மிகுந்த சிங்கம் ஒன்று வசித்து வந்தது.

அந்தச் சிங்கம் ஒரு வரைமுறையின்றி நாள்தோறும் கண்முன் தென்படும் விலங்குகளையெல்லாம் அடித்துக் கொன்று தின்று வந்தது.

பசியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கண்முன் தென்படும் விலங்குகளைக் கொன்று அழிப்பது அதன் பொழுது போக்காக இருந்தது.

சிங்கத்தின் அந்த அக்கிரமச் செயலால் பீதியும் கவலையும் அடைந்த வனவிலங்குகள் ஒரு நாள் ஒன்றுதிரண்டு சிங்கத்திடம் சென்றன.

அனைத்து விலங்குகளும் சிங்கத்திடம் மண்டியிட்டு வணங்கி அரச பெருமானே. தங்கள் குடிமக்களாகிய எங்களைக் காத்து ரட்சிக்க வேண்டிய தாங்கள் எங்கள் இனத்தவர்களைக் கண்டபடி அழித்து நிர்மூலப் படுத்துவது நியாயமாகுமா?

மன்னராகிய தாங்கள் பசி நீங்கப்பெற்றவராக, உடல்வலிமை மிக்கவராக இருந்தால்தான் எங்களுக்கு நிச்சயமான பாதுகாப்புக் கிட்டும் என்பதை ஒப்புக் கொள்கிறோம்.

எங்களைப் போன்ற விலங்குகள் தான் உங்களுக்கு உணவாக முடியும் என்பதையும் மறுக்கவில்லை. ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? தங்களுக்குத் தேவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் எங்களைக் கொன்றழிப்பது தங்களின் விளையாட்டு என்று ஆகிவிட்டால் நாங்கள் அனைவரும் பூண்டற்றுப் போய் விடுவோம், அப்போது தாங்கள் பசி நீங்க வழியில்லாமல் பட்டினி கிடக்க வேண்டி நேரிடும் அல்லவா!

இவ்வாறெல்லாம் வன விலங்குகள் மிகவும் பணிவுடன் கூறின.

சரி நான் என்ன செய்ய வேண்டுமென்ற எதிர்பார்க்கிறீர்கள்? என்று சிங்கம் கேட்டது.

மகிமை மிக்க மன்னவா, நமக்குள் ஓர் ஏற்பாடு செய்து கொள்வோம். இன்று முதல் தங்களுடைய உணவு நேரத்தில் நாங்கள் முறை வைத்துக் கொண்டு எங்களில் ஒருவரை உணவாக அனுப்புகிறோம். தாங்கள் அதோடு அன்றைய தினம் திருப்தியடைந்து விட வேண்டும். தாங்கள் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டால் எங்கள் குலமும் படு நாசத்திலிருந்து தப்பிப் பிழைக்கும், தங்களுக்கும் தட்டுப்பாடின்றி வாழ்நாள் முழுவதும் உணவு கிடைத்துக் கொண்டே இருக்கும்.

இவ்வாறு வன விலங்குகள் ஒருமித்த மனத்துடன் ஒரு திட்டத்தைச் சிங்கத்திடம் சமர்ப்பித்தன.

சிங்கம் யோசித்துப் பார்த்தது.

காட்டில் வன விலங்குகள் எல்லாம் ஒரு குறுகிய காலத்தில் பூண்டற்றுப் போனால் அப்புறம் பசிக்கு விலங்குகள் கிடைக்காமலேயே போய்விடும். ஆகவே விலங்குகளின் கோரிக்கையை ஏற்பதுதான் நல்லது என்ற முடிவுக்குச் சிங்கம் வந்தது.


## பழமொழிகள்

- அடக்கமே பெண்ணுக்கு அழகு.
- அகவிலை அறியாதவன் துக்கம் அறியான்.
- அடி செய்வது அண்ணன் தம்பி செய்யார்
- அவனவன் செய்த வினை அவனவனுக்கு.
- அழகுக்கு அணிந்த ஆபரணம் ஆபத்துக்கு உதவும்.
- அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்.
- அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான்.
- அறமுறுக்கினால் அற்றுப் போகும்.
- அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்கவேண்டும்.
- அறிய அறியக் கெடுவார் உண்டா?
- அறிவில்லார் சிநேகம் அதிக உத்தமம்.
- அறிவீனர் தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம்.

## விடுகதைகளும் விடைகளும்

- வால் நீண்ட குருவிக்கு வாய் உண்டு வயிறில்லை.
  **அகப்பை**
- மூன்று கொம்பு மாடு: ஒரு கொம்பால் குத்துது.
  **நெருஞ்சி முள்**
- தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும்.
  **தபால் தலை**
- எங்கள் அப்பா பணத்தை எண்ண முடியாது எங்கள் அம்மா புடைவையை மடிக்க முடியாது.
  **நட்சத்திரங்கள், வானம்**
- தவழும்போது ஒரு பெயர். விழும்போது வேறு பெயர். உருளும் போது இன்னொரு பெயர்.
  **மேகம், மழை, நீர்**
- கடலில் கலக்காத நீர். யாரும் குடிக்காத நீர்-அது என்ன?
  **கண்ணீர்**
- கடல் நீரில் வளர்வேன் மழை நீரில் மடிவேன்.
  **உப்பு**
- மாட மாளிகையில் வசிப்பான் மன்னவனும் அல்ல. கூட கோபுரத்தில் வசிப்பான் கொற்றவனும் அல்ல.
  **மாடப்புறா**
- கரை உண்டு படிக்கட்டு இல்லை. தலைப்பு உண்டு கட்டுரை இல்லை.
  **புடைவை**
- அண்ணன் வீட்டில் தம்பி போகலாம். தம்பி வீட்டில் அண்ணன் போக முடியாது.
  **படி, ஆழாக்கு**
- உரசினால் போதும் உயிர் முடிந்து போகும்.
  **தீக்குச்சி**
- இறக்கை இல்லாத குருவிக்கு இரும்பிலே மூக்கு. பாய்ந்து செல்லும் குருவிக்குப் பஞ்சிலே வால்.
  **ஊசி**
- ஆனைக்கும் குதிரைக்கும் அண்டாத தண்ணீர். தொண்டைமான் குதிரைக்குத் தொடையளவு தண்ணீர்.
  **தவளை**
- பூவில் பிறக்கும் - அது வாயில் சுவைக்கும்.
  **தேன்**
- மத்தால் அடித்து, பத்துப்பேர் பிடித்து, பதமாய் எடுப்பது எது?
  **வெண்ணெய்**
- கையில் பந்தாடும் கதிரவனுடன் போராடும். கனலுக்கு இரையாகும் கரிசாம்பல் பொடியாகும்.
  **வரட்டி**

## வழிகாட்டுங்கள்



வெற்றியை விட தோல்விதான் அதிகப் படிப்பினைகளைச் சொல்லிக் கொடுக்கிறது

–கார்ல் மெனின்கர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விபத்தைக் கட்டுப்படுத்தாமல் விடுவோமாயின்...

நாட்டில் இடம்பெறும் விபத்துக்களில் வடபகுதி முன்னிலையில் உள்ளதென்பதை உணர முடிகிறது.

விபத்து மரணங்கள் நடக்காத நாளே இல்லை என்று சொல்லுமளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

கடந்த 23ஆம் திகதி ஓமந்தைப் பகுதியில் நடந்த விபத்தொன்றில் காரைநகரைச் சேர்ந்த ஐந்து பேர் உயிரிழந்தனர் என்பதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மரணமடைந்தனர் என்ற தகவல் எவராலும் தாங்க முடியாதது.

ஒருகணப் பொழுதில் நடந்த விபத்தில் ஐந்து பேர் மரணமடைவதென்பது யுத்த கால மரணங்களுக்கு ஒப்பானது.

இவ்வாறு வடபகுதியில் நாளுக்கு நாள் நடந்தேறும் விபத்து மரணங்களுக்குக் காரணம் என்ன என்று ஆராயும்போது,

வேகக் கட்டுப்பாட்டுப்பாட்டை பின்பற்றாமை, நீண்டதூரப் பயணம் காரணமாக சாரதிகள் நித்திரையாகி விடுவது, இளம் பிள்ளைகள் வாகனத்தைச் செலுத்தும்போது நிதானமற்றுச் செயற்படுவது, விபத்து ஏற்படுத்தக்கூடிய பேரிழுப்புகளைப் புரிந்து கொள்ளாமல் சாரத்தியம் செய்வது என்பன காரணமாக விபத்துக்கள் நடந்தேறுகின்றன.

அண்மைக்காலமாக வடபகுதியில் நடந்த விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரங்களைக் கடந்து விட்டது.

எனினும் விபத்துக்களைத் தவிர்க்கவோ, குறைக்கவோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

விபத்து மரணங்கள் நாளுக்கு நாள் நடக்கின்றபோதிலும் இளைஞர்கள் சிலர் இன்னமும் மோட்டார் சைக்கிளை அதிவேகமாகச் செலுத்துவது, மோட்டார் சைக்கிள் ஓட்டத்தில் சாகசம் காட்டுவது என்பனவற்றைப் பார்க்கும்போது, இவர்கள் திருந்தவே மாட்டார்களா என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டம் உள்ளது.

இதுதவிர, தொலைபேசி கதைத்தபடி வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள்; மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் என ஏகப்பட்ட சம்பவங்கள் விபத்தை மலிதாக்குகின்றன.

இதுதான் என்றால் இல்லை, வடபகுதியில் கடமையாற்றும் போக்குவரத்துப் பொலிஸார் இலஞ்சம் வாங்குவதில் பேரம் பேசுகின்றனரே அன்றி சாரதிகளை ஒழுங்குபடுத்துவதற்கான தண்டங்களை விதிப்பதாகத் தெரியவில்லை.

ஆக, மேற்போந்த விடயங்கள் அனைத்தும் சேர்ந்து மக்களின் உயிர்களைக் காவு கொள்கின்றன.

எனவே விபத்தைத் தடுக்க விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது மிகவும் கட்டாயமானதாகும்.

## 'அப்பாவி தமிழர்கள் தனிநாட்டை விரும்பவில்லை'

# புலிகளின் சித்தாந்தத்தை மக்கள் மனதில் விதைக்க சில தமிழ் அரசியல்வாதிகள் தீவிர முயற்சி

## பாதுகாப்புச் செயலாளர் கமால் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றிலுமாக இலங்கை இராணுவம் தோற்கடித்தபோதும் சில தமிழ் அரசியல் வாதிகள் புலிகளின் சித்தாந்தங்களை தமிழ் மக்களின் மனதில் விதைக்க தீவிரமாக முயற்சிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண குற்றம் சாட்டினார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று செவ்வாய்க்கிழமை சாம்பியா நாட்டின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டபிள்யூ.எம். சிகாஸ வேவை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பெரும்பான்மையான தமிழ் மக்களின் அபிலாஷைகள் அந்த அரசியல் வாதிகளின் சித்தாந்தத்திலிருந்து வேறுபட்டவை என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார.

எனவே இவ்வாறான பிரிவினைவாத சித்தாந்தத்தை தோற்கடிப்பதற்கான சவால் இன்னும் தமக்கு உள்ளது என்றும் கமால் குணரட்ன தெரிவித்தார்.

புலிகளால் பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் தனி நாட்டை விரும்பவில்லை, ஆனால் சில தமிழ் அரசியல்வாதிகள் அதிகாரப் பகிர்வை விரும்புகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

மேலும் இந்த சந்திப்பின்போது, பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் இராணுவத்தினரின் பங்களிப்பு குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன சாம்பியா நாட்டின் இராணுவத் தளபதிக்கு விளக்கியிருந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (இ-7)

## விடுதலைப்புலிகளுடன் தொடர்பு என குற்றம் சுமத்தப்பட்டவர்களை

### விடுதலை செய்த மலேசிய உயர் நீதிமன்றம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மலேசியாவின் காடேக் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.சாமிநாதன் உட்பட 8 பேரை கோலாலம்பூரில் உள்ள உயர் நீதிமன்றம் இன்று விடுதலை செய்துள்ளது.

மலேசிய குற்றவியல் சட்டப் பிரிவு 254 ஷரத்திற்கு அமைய குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் எதிரான நடவடிக்கைகளை நிறுத்துமாறு மலேசியா சட்டமா அதிபர் டான்ஸ்ரீ டெமி தோமஸ் . அறிவுறுத்தியதை அடுத்து, நீதிபதிகள் முஹம்மது ஜமீல் /ஹசின் மற்றும் கொலின் லாரன்ஸ் செக்வெரா மற்றும் நீதித்துறை ஆணையாளர்கள் அஹ்மத் ஷாஹிர் மொஹமட் சல்லே மற்றும் அஸ்லம் ஜைனுதீன் ஆகியோர் சந்தேக நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளித்தனர்.

35 வயதான சாமிநாதன், 28 வயதான எஸ்.அரவிந்தன், 30 வயதான பாதுகாப்பு காவலர் எம்.பூமுகன், ஜனநாயக செயலக கட்சியின் உறுப்பினரான 44 வயதான வி. சுரேஷ் குமார், 39 வயதான மலாக்கா Green Technology Corporation தலைமை நிர்வாக அதிகாரி எஸ்.சந்திரு, 53 வயதான ஆசிரியர் சுந்தரம் ரெங்கன ரெங்கசாமி, 29 வயதான உலோக வர்த்தகர் ஏ. கலைமுகிலன், மற்றும் 39 வயதான எஸ் தீரன் ஆகியோரே இவ்வாறு விடுதலை செய் யப்பட்டுள்ளனர்.

முன்னதாக, துணை அரசு சட்டத்தரணிகள் முகமட் ஃபர்ஹான் அலிஃப் அகமட், முகமட் அசிராஃப் மின் ஹாட், முகமட் இஜானுதீன் அலியாஸ் மற்றும் முகமட் நுசுல் அஸீவார் சுல்கிஃப்லி ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான அதே குற்றச்சாட்டுகளை மீண்டும் நிலைநாட்ட வாய்ப்பில்லை என்ற அடிப் படையில் குற்றச்சாட்டுகளை இரத்துச் செய்யுமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வழக்கு தொடர அரசு விரும்பாததால், நான்கு நீதிபதிகள் விண்ணப்பத்தை அனுமதித்த பின்னர் குற்றம் சுமத்தப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தனர். (ம)

### மருதனார்மடத்தில் விடுதி சுற்றிவளைப்பு

## சந்தேக நபர்கள் விசாரணையின் பின் பொலிஸாரால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட நபர்கள் அனைவரும் விசாரணையின் பின் சுன்னாகம் பொலிஸாரால் நேற்றைய தினம் விடு விக்கப்பட்டனர்

இச்சம்பவம் தொடர்பில். தெரிவதாவது, மருதனார் மடப் பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வில் பல இளைஞர்கள் கலந்து கொண்டனர்

இந் நிலையில் குறித்த நிகழ்விற்கு வருகை தந்த இளைஞர்கள் மீது அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் சென்ற இராணுவம் சந்தேகம் கொண்ட நிலையில் குறித்த விடுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது

எனினும் குறித்த விடுதிக்கு வருகை தந்த இளைஞர்களிடம் இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து நடத்திய விசாரணையில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் ஏதும் காணப்படாத நிலையில் விசாரனைகளின் பின் விடுதலை செய்யப்பட்டனர் (ம-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில** சாம்பல்தோட்டம், இலுப்பைக்குளம், முகத்தாங்குளம் 2ஆம் வட்டாரம், கொக்கெலய, அக்போபுர, கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, தெற்கிலுப்பைக்குளம், வெளிக்குளத்திலிருந்து துட்டுவாகை வரை, கீரத்தி அரிசி ஆலை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** மன்னார் நகரப் பிரதேசம் ஒரு பகுதி, பள்ளிமுனை, மூர் வீதி, அரசாங்க அதிபர் அலுவலகம், மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கார்கில்ஸ் பூட் சிற்றி ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

### 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம்

## திட்டமிட்டபடி வழங்கப்படும்

### உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன

50 ஆயிரம் பட்டதாரிகளை பயிலுநர்களாக நியமிக்கும் வேலைத்திட்டம், திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மீளப் பெறப்பட்ட குறை நிரப்பு பிரேரணையால் பட்டதாரிகளை பயிலுநர்களாக நியமிக்கும் பணி இடைநிறுத்தப்படும் என்று வெளியாகிய செய்தியை அவர் மறுத்துள்ளார்.

இதுதொடர்பில் அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன் தெரிவித்ததாவது:

இடைக்கால அரசால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மீளப் பெறப்பட்ட குறை நிரப்பு பிரேரணைக்கும் பட்டதாரிகள் நியமனத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

கடந்த அரசால், ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவையை செலுத்துவதற்காகவே, அரசு குறை நிரப்பு பிரேரணையை பாராளு மன்றத்தில் சமர்ப்பித்தது.

50 ஆயிரம் பட்டதாரிக்களுக்கு, பயிற்சிக்காலத்தில் 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பன வழங்கப்படும்.

இதற்கான நிதியை, அரசின் நிதிமுகாமைத்துவத்தின் மூலம் சமாளிக்கக்கூடிய வல்லமை உள்ளது என்றார் (ம)

## இலங்கை மத்திய வங்கியின் 6வது மாடியிலிருந்து விழுந்து 16 வயதுச் சிறுவன் பலி!

(கொழும்பு)

கொழும்பு கோட்டைப் பகுதியிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆறாவது மாடியிலிருந்து சிறுவன விழுந்து உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3.15 மணியளவில் இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர 16 வயது சிறுவன் எனத் தெரியவந்தது.

இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றும் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் மகனே இவ்வாறு விழுந்து உயிரிழந்தார்.

உயிழந்த சிறுவனின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை கொழும்பு கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### எது நம்முடைய பணம்?

❖ கடனைச் செலுத்துவதாக இருந்தால், பாக்கி இல்லாமல் தீர்த்து விட வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் கடன் வளர்ந்து விடும்.


❖ தர்மத்தில் செலவழித்த பணம் தான் நம்முடைய பணம். அது மறுபிறவியில் நமக்கு துணை செய்யும்.

❖ மனிதன் நற்குணங்களான அன்பு, அடக்கம், கருணை, பொறுமை, அமைதி ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள முயலவேண்டும்.

❖ சோதனையும் நமக்கு ஒரு அனுபவம் தான். அதையும் வாழ்வின் படிக்கல்லாக மாற்றி முன்னேற வேண்டும்.

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம் யாழ்.பல்கலைக்கழக அணி சம்பியன்





சிறிகுகன்


துவாரகசீலன்


ராகுலன்


ஆதித்தன்

விக்ரம்-ராஜன்- கங்கு தொடரின் இறுதிப்போட்டி கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யா/ பல்கலைக்கழக அணி, ஏபி அணியை 40 ஓட்டங்களால் வெற்றி பெற்று விக்ரம்-ராஜன்- கங்கு வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணியினர் 40 ஓவர்களில் 08 இலக்குகளை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றனர்.

முதல் இரு இலக்குகளையும் குறைந்த ஓட்டங்களில் இழந்துள்ளனர். இந்த நிலையில் டனுஸன், துவாரகசீலன் மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக 140 ஓட்டங்களைப் பெற்று, அவர்கள் இருவரும் தலா 73 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

சந்திரசிறி-18, சுபேந்திரன்-37, கஜேந்திரன்-17 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஏபி அணி சார்பாக விஸ்ணு 5 இலக்குகளையும், ராகுலன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

206 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஏபி அணி 38 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. ஏபி அணியிலும் 5ஆவது விக்கெட் இணைப்பட்டமாக 103 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட யதுகுலன், ராகுலன் ஜோடி தலா 39, 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

களத்தடுப்பில் பல்கலைக்கழக அணி சார்பாக ஜனந்தன்-4, சுபேந்திரன், துவாரகசீலன் தலா இரண்டு இலக்கினையும் ஹெப்டியாராச்சி, லோகதீஸ்வர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

இத்தொடரில் ஆகக்கூடிய ஓட்டங்களை ஏபி அணியைச் சார்ந்த ஆதித்தனும் ஆகக்கூடிய இலக்குகளை ஏபி அணியைச் சார்ந்த ராகுலனும் இறுதிப் போட்டியின் சிறந்த வீரராக யாழ். பல்கலைக்கழக அணியைச் சார்ந்த துவாரகசீலனும் மேற்படி தொடரின் தொடர் ஆட்டநாயகனாக ஒல்ட்கோல்ஸ் அணியைச் சார்ந்த சிறிகுகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு யாழ். பல்கலைக்கழக அணி 7.85 புள்ளிகளையும் ஏபி அணி 2.85 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (க)

# மன்னார் உதைபந்தாட்ட பிறீமியர் லீக் போட்டியில் பள்ளிமுனை எப்.சி.வெற்றி







மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வும் முதல் சுற்றுப்போட்டியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

"மன்னார் பிறிமீயர் லீக்" தலைவரும், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவரும், மன்னார் நகர முதல்வருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வா மற்றும் விருந்தினர்களாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிதிக்குழுவின் தலைவரும், மாவட்ட லீக்குகளின் அபிவிருத்திக் குழு தலைவருமான ஆர். புகழேந்திரன், மன்னாரின் உதைபந்தாட்ட தந்தை என அழைக்கப்படும் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லஸ் ஆகியோர் கலந்து கொண்டதோடு அணிகளின் உரிமையாளர்கள், வீரர்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

முதல் சுற்றுப் போட்டியானது இரவு 8 மணியளவில் மின்னொளியில் பள்ளிமுனை உதைபந்தாட்ட அணிக்கும், பிரதர் ஸ்ரனி ஐக்கிய உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் இடம்பெற்றது.

இதன்போது பள்ளிமுனை உதைபந்தாட்ட அணியானது 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (க-285)

# மடு உதைபந்தாட்ட கழகம் அபார வெற்றி



மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறிமீயர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 2 ஆம் நாள் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை இரவு 7.45 மணியளவில் மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

குறித்த உதைபந்தாட்ட போட்டியானது மடு உதைபந்தாட்ட கழகத்திற்கும், மன்னார் பீனிக்ஸ் உதைபந்தாட்ட கழகத்திற்கும் இடையில் போட்டி இடம் பெற்றது.

முதலில் போட்டி ஆரம்பமாகி 33 ஆவது நிமிடத்தில் மடு உதைபந்தாட்ட கழக வீரரான ரி.கிளின்ரன் முதலாவது கோலையும், அதனைத் தொடர்ந்து 86 ஆவது நிமிடத்தில் 2 ஆவது கோலையும் அடித்தார்.

இதனால் மடு உதைபந்தாட்ட கழகம் 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-285)



வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் 2019ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் மேற்கு சிறி சித்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலைக்கான கூரைத்தகடுகள் மற்றும் பெரியபண்டிவிரிச்சான் மேற்கு வள்ளுவர் விளையாட்டுக்கழகத்திற்கான மைதான விளக்குகள் என்பன மடு பிரதேச செயலகத்தில் வைத்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜீவா ஜெயதீசன் மற்றும் மடு பிரதேச செயலாளர் ஜெயகரன், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-299)

## கொரோனா...

லும், உலக நாடுகள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

தென் கொரியா, இத்தாலி, ஈரான் உள்ளிட்ட நாடுகளில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்பதால் அங்கு இது குறித்த கவலை எழுந்துள்ளது.

இருப்பினும் இந்த கொரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டது சீனாவாகவே உள்ளது. அந்நாட்டில் இதுவரை 77,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2,600 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவுக்கு வெளியே சுமார் 30 நாடுகளில் 1200 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சுமார் 20 பேர் அதற்கு பலியாகியுள்ளனர். இத்தாலியில் திங்களன்று 4 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.

இத்தாலி, ஈரான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளில் கொரோனா தொற்று இருப்பது க்ண்டறியப்பட்டது "கவலைக்குரியது" என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட் ரோஸ் தெரிவித்துள்ளார். (ம)

## கூட்டமைப்பின்...

இந்நிலையில் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.கட்சி மற்றும் சுயேட்சைக்குழு ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தவிசாளர் தெரிவு செய்யப்பட்டு ஆட்சி இடம்பெற்றது.

இந்நிலையில் கடந்த வருட இறுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வெற்றியீட்டி தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டவர் மொட்டுக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்திருந்தார்.

இதனால் அவர் அங்கம் வகித்த ரெலோ கட்சியினால் அவரது உறுப்புரிமை நீக்கப்பட்டு தவிசாளர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார்.

இந்நிலையில் நேற்றைய தினம் உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இடம்பெற்ற நிலையில் சுயேட்சைக் குழுவின் ஆதரவுடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி குறித்த சபையைக் கைப்பற்றியது.

தவிசாளராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் நல்லதம்பி சசிகுமாரும் உப தவிசாளராக சந்தியாப்பிள்ளை தோமஸ் செல்வராஜும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வி.கே. ஜெகன் நெடுந்தீவுக்குச் சென்று தமது கட்சிக்கான ஆதரவைத் திரட்டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-10)

## 4 பெண்கள் உட்...

லைக்கு முன்பாகவுள்ள இராணுவ சாவடியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் பணியாற்றும் திருகோணமலையைச் சேர்ந்த 25 வயதுடைய பெண்ணொருவர் (முஸ்ஸிம்) தமிழ் இளைஞர் ஒருவரை காதலித்து வந்துள்ளார்.

இவர்களின் காதல் விடயம் கடந்த சில மாதங்களுக்கு முன் பெண்ணின் வீட்டாருக்கு தெரியவந்துள்ளது. இதன்போது பெண்ணின் குடும்பத்தினருக்கிடையே சண்டைகள் இடம்பெற்றுள்ளது.

காதலுக்கு பெற்றோரின் எதிர்ப்பால் குறித்த பெண் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பெண்கள் விடுதியில் தங்கிருந்து பணியாற்றி வந்துள்ளார். (அவரது வீட்டிற்கு செல்லாது).

நேற்று வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த சில நபர்கள் பெண்ணை வலுக்கட்டாயமாக வானில் ஏற்றி திருகோணமலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

பெண்ணை வலுக்கட்டாயமாக இழுப்பதனை அவதானித்த வைத்தியசாலை நிர்வாகத்தினர் கிளிநொச்சி இராணுவ தலைமையகத்திற்கு தகவல் வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தினர் வவுனியா இராணுவ தலைமையகத்திற்கு தகவலை வழங்கி ஓமந்தை இராணுவ சாவடியில் குறித்த வானை மடக்கி பிடித்தனர்.

இதன்போது வாகனத்தில் இருந்த சாரதி உட்பட ஒன்பது நபர்களை இராணுவத்தினர் பிடித்து அவர்கள் பயணித்த வாகனத்துடன் அவர்களை ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் ஆஜரப்படுத்தினர்.

பெண்ணை வலுக்கட்டாயமாக அழைத்துச்சென்றவர்கள் பெண்ணின் உறவினர்கள் என தெரியவருவதாக தெரிவித்த ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-114,250)

## சர்வதேச நெருக்...

என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்செயலாளர் பான் கி மூனுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகிக்கும் காலகட்டத்தில் செய்து கொண்ட கூட்டறிக்கையின் பிரகாரமே 2015ஆம் ஆண்டு 30/1 பிரேரணை மற்றும் அதற்கு பிற்பட்ட பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

தற்போது ஜெனிவாவில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 பிரேரணையினைக் கொண்டு கடந்த அரசாங்கத்தை தேசத் துரோக குற்றவாளிகள் என்று விமர்சிக்க முடியாது.

சர்வதேசத்தின் மத்தியில் இன்று இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமே முழு பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறினார். (ம)

## முதலாம் தவணை...

போட்டிகள், கல்விச் சுற்றுலாக்கள், கண்காட்சிகள் மற்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளை நடத்துவதன் ஊடாக மாணவர்களின் ஒற்றுமை மற்றும் குழு செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படவுள்ளன.

இதனால் 2021ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சைகள் இடம்பெறாது.

இந்த முடிவு எடுக்கப்பட்ட போதும் இந்த ஆண்டு திட்டமிட்டமாறு முதலாம் தவணைப் பரீட்சைகள் நடத்தப்படும். அதில் பாதிப்புக்கள் ஏற்படாது" என்றும் கல்வி அமைச்சின் சிறப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## காணாமல் ஆக்க...

யில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

தற்போதைய ஆட்சியில் கூட பெண்களாகிய எங்களுக்கு விடுதலை இல்லை சுதந்திரமில்லை. இன்று எமது கணவன்மார்களையும் உறவுகளையும் தொலைத்து 10 வருடங்களாகியும் உறவுகளின் வருகையை எதிர்பார்த்து பல தாய்மார்கள் மரணித்துப்போன நிலையிலும் எமக்கான தீர்வு ஒன்று வழங்கப்படவில்லை.

பெண்களாகிய எங்களுக்கு எப்போது சுதந்திரம் கிடைக்கின்றதோ எமது உறவுகள் என்று வருகின்றார்களோ அல்லது நியாயமான தீர்வு கிடைக்கின்றதோ அன்றுதான் எமக்கு சுதந்திரம். மேலும் உயிருடன் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது. ஐ.நா எங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் உயிருடன் இல்லை என குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு உயிருடன் இல்லை என்றால் நாங்கள் உயிருடன் ஒப்படைத்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

இன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் என்ற பெயரில் பலர் போலியாக அரசியல் சாயம் பூசப்பட்டு களமிறக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று என் மீதும் பல போலியான குற்றம் சுமத்தி ஊடகங்களுக்கு கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர் .

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்தை குழப்புவதற்காக பல்வேறுபட்ட அரசியல் சக்தி கள் இன்று தேர் தலை முன்னிறுத்தி களம் இறங்கியிருக் கின்றன. தமது வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் அரசியல் வாதிகள் தயவுசெய்து எங்களது போராட்டத்தை கொச்சை படுத்தாதீர்கள் என்றார். (ம)

## ஐ.நாவிலிருந்து...

ஜெனிவா கூட்டத்தொடர் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பிரேரணையிலிருந்து விலகுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும், பொதுத் தேர்தலில் தமது வெற்றி தொடர்பாக நம்பிக்கையின்றி இருக்கும் அரசாங்கம் மக்கள் மத்தியில் தம்மை வீரர்களாக காண்பித்துக் கொள்வதற்காகவே இவ்வாறு அறிவிப்பை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கம் இந்த மூன்று மாத காலத்திற்குள் மக்களை கவரும் வகையில் எந்தவித செயற்பாடுகளையும் முன்னெடுக்காததால் பொதுத் தேர்தலில் அரசாங்க தரப்பினரின் வெற்றி தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளது என சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

மேலும் இவர்கள் ஜனாதிபதி தேர்தலின் போது ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள், தேசிய பாதுகாப்பு, இன அடிப்படைவாதத்தை முன்னிலைப்படுத்தி பிரசாரங்களை முன்னெடுத்தே ஆட்சிகளை கைப்பற்றினர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் பொதுத் தேர்தலை இலக்கு வைத்தே ஜெனிவா பிரேரணையிலிருந்து விலகுவதாக அறிவிப்பு விடுத்துள்ளனர். இவர்கள் மக்கள் மத்தியில் தம்மை வீரர்களாகவும், தாம் சர்வதேசத்திற்கு அஞ்சி செயற்படுவதில்லை என்றும் காட்டுவதற்காக இதனை செய்துள்ளார்கள் என சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

இவர்கள் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொண்ட இந்த நடவடிக்கையினால் சாதாரண மக்களே பெருமளவில் பாதிக்கப்பட போவதாகவும் சமன் ரத்னபிரிய கூறினார். (ம)

## காணாமல்போன...

பெரும்பாலானோர் இன்றும் ஐரோப்பிய நாடுகளில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு இறந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என கூறப்படுபவர்கள், ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருவதோடு, இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

ஐ.நா. அமர்வு இடம்பெறும்போது இது போன்ற நபர்கள் ஐரோப்பிய நாடுகளில், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்கிறார்கள். இப்படியான புலம்பெயர்ந்தவர்களின் விபரங்களை நாம் சம்பந்தப்பட்ட நாடுகளிடம் கோரியிருந்தும், இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

எனவே, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்தத்தின்போது இறந்தவர்கள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்த வேண்டுமெனில், புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்களின் தகவல்களை எமக்கு வழங்க வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுக்கிறோம்" எனக் கூறினார். (ம)

## புலிகளின் ஆதர...

வர்களும், 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை அரசாங்கம் விலகுவதற்கு தடையை ஏற்படுத்துவதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். (ம)


நீரோகா
திகதி 2020/02/25
சீட்டிழுப்பு இலக்கம் 0667
லக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 15 28 52 64

மஹஜன சம்பத
திகதி 2020/02/25
சீட்டிழுப்பு இலக்கம் 4122
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 2 8 8 8 5

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 25-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2403
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 06 13 20 45

செவண
திகதி 25/02/2020
சீட்டிழுப்பு இலக்கம் 265
ஆங்கில எழுத்து O
வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 07 37 52

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1650
சீட்டிழுப்பு திகதி 25/02/2020
வெற்றி இலக்கங்கள் 02 04 13 23 Y
ரூ. 47,277,680

B 21 65 68 72
சீட்டிழுப்பு வாரம் 564
திகதி 25.02 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,350,480
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 894
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,055,350/-
வெற்றி இலக்கங்கள் 05 55 60 71 B

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.02.2020
வெற்றி வாரம் 2780
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் விருச்சிகம் 15 17 21 61
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,207,858

பம்பர் சான்ஸ்
ரூ.500 பரிசுக்குரிய 5939
ரூ.100 பரிசுக்குரிய 524
விசேட இல.
2020.02.26 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# நிலையான கல்விக்கொள்கை உருவாக்கப்பட வேண்டும்

## -இளைஞர் விவகார அமைச்சர் டளஸ்



பாடங்களை மனனம் செய்து பரீட்சைக்கு முகங்கொடுக்கும் கல்வி முறைமைக்கு பதிலாக மாணவர்களை மையமாக கொண்ட புதிய கல்வி முறைமையொன்றை மாற்றியமைக்க வேண்டும்.

அத்துடன் நிலையான கல்வி கொள்கையொன்றை கொண்டு வர நாட்டின் தலைமைத்துவம் எதிர்பார்ப்பதாக கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

காலி லபதுவ சிரிதம்ம கல்லூரியின் 25 ஆவது வருட விழாவில் திங்கட்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

தேசிய பாதுகாப்புக்கு அடுத்தபடியாக கல்வி துறைக்கு முக்கியத்துவம் செலுத்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச , நாட்டு மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் மாற்றம் காணாத புதிய கல்வி கொள்கையொன்றை உருவாக்குவதே அவரின் பிரதான நோக்கமாகும். வரலாற்று தவறுகளை சுட்டிக்காட்டுவதனை விடுத்து எதிர்கால நலன்களை அடிப்படையாக கொண்டு செயற்பட வேண்டும்.

அத்துடன் இந்த நாட்டில் உள்ள 373 தேசிய பாடசாலைகளில் 274 பாடசாலைகளுக்கு அதிபர்கள் இல்லை.

எனவே நாட்டின் கல்வி துறையில் முன்னெடுக்க வேண்டியுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது அனைத்து சவால்களுக்கு முகங்கொடுக்க நான் தயாராகவே உள்ளேன்.

நாட்டின் கல்வி கட்டமைப்பில் இணையவிருக்கும் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரிகளாக மாற்ற வேண்டும் என்பதே ஜனாதிபதியின் திட்டமாகும். இதன்படி அனைத்து கல்வியியற் கல்லூரிகளையும் கல்வியியற் பட்டம் வழங்கும் நிறுவனமாக மாற்றியமைக்க அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என்றார். (ம)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு யார் காரணம்

## சஜித் பிரேமதாச கேள்வி

அத்தியாவசியப் பொருட்களின் விலை வானைத் தொட்டுள்ளமைக்கு யார் காரணம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றக் கட்டத் தொகுதியில் நேற்று(செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் "ஜனாதிபதித் தேர்தலின்போது, அத்தியாவசியப் பொருட்களைக் காண்பித்து பிரசார மேடைகளில், தற்போதைய அரசாங்கத் தரப்பினர் எம்மைக் குறைக் கூறினார்கள். தற்போது நாம் இதனையே அரசாங்கத் தரப்பினரைப் பார்த்துக் கேட்கிறோம்.

இப்போது, அத்தியாவசியப் பொருட்களின் விலை வானைத் தொட்டுள்ளது. இதற்கு யார் காரணம் என நாம் கேட்க விரும்புகிறோம்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைந்துள்ள நிலையில், இலங்கையில் மட்டும் விலைக் குறையாமல் அப்படியே இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றும் அரசாங்கம் கூறவேண்டும். ஒட்டு மொத்த மக்களும் இன்று பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த மக்களை மீட்பதற்காகவே, எதிர்க்கட்சிகள் நாம் ஒன்றிணைந்து பலமான கூட்டணியொன்றை ஸ்தாபித்துள்ளோம். இந்த ஐக்கிய மக்கள் சக்திக்கு மேலும் பலம் சேர்க்கும்வகையில், பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய முன் னணியுடன் உத்தியோகபூர்வமாக இணைந்துகொண்டுள்ளது" என கூறினார். (ம)

# முதற்தர அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதே எமது நோக்கமாகும்

## பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க

எதிர்காலத்தில் முதற்தர அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதே நோக்கமென பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "நாம் அரசியல் தீர்மானமொன்றை எடுத்துள்ளோம்.

அந்தவகையில், ஐக்கிய மக்கள் சக்தியில் ஜாதிக ஹெல உறுமய மற்றும் எமது கட்சியுடன் இணைந்துள்ள சிவில் சமூக அமைப்புக்களையும் இன்று இணைத்துள் ளோம்.

இதன் ஊடாக முதற்தர அரசியல் கலாசாரமொன்றை எதிர்காலத்தில் நிலை நாட்டுவதே எமது நோக்கமாகும்.

நாம் கடந்த காலங்களில் பல்வேறு கூட்டணிகளில் இடம்பிடித்துள்ளோம். எனினும், கட்சியாக உருவெடுத்துள்ள இந்த பாரியக் கூட்டணியொன்றில் இணைவது இதுதான் முதன் முறையாகும்.

நவீனத்துவம் மிக்க தேசியவாதமொன்று இதன் ஊடாக உருவாக்கப்படும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்" என குறிப்பிட்டுள்ளார். (ம)


றோமானியா வேலைவாய்ப்பு!
மேசன் & கனரக வாகன சாரதிகள்
2009ஆம் ஆண்டுக்கு முந்திய சாரதி அனுமதி பத்திரம் அவசியம்
உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்
சம்பளம் US $ 590 - 700 106,790 - 126,700
மூன்று அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய
077 00 38 215, 077 55 46 956, 021 221 9 221
எமரல்ட் ஐல் License No. 2268
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

பராமரிப்பாளர் தேவை
யாழ் நகரில் புதிதாக தொடங்கவிருக்கும் கல்லூரியில் துப்பரவாக்கல், பூந்தோட்ட பராமரிப்பு, அலுவலக பராமரிப்பு போன்ற வேலைகளை முழு நேரமாக செய்யக்கூடிய அனுபவமுள்ளவர் தேவை.
சம்பளம் - 25, 000/=
(c-9340)
0768226243

அரியதோர் வேலைவாய்ப்பு....!
உங்கள் திறமைக்குரிய வேலை.
உங்கள் முயற்சிக்குரிய சம்பளம் கிடைக்கவில்லையா?
உங்களுக்கு கை கொடுக்க
நாங்க Ready நீங்க Ready யா...?
உங்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட தகைமை இருப்பின் தொடர்பு கொள்ளவும்.
உலகளாவிய ரீதியில் இயங்கி வரும் எமது EDM நிறுவனமானது யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா (வடமாகாணம்) திருகோணமலை, மட்டக்களப்பு, (கிழக்கு மாகாணம் ) ஆகிய பல மாவட்டங்களில் 20 புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது. இவ் புதிய கிளைகளிற்காக 50 ற்கு மேற்பட்ட பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.
பதவி வெற்றிடம்
1.களஞ்சியப் பொறுப்பாளர்
2. விற்பனையாளர்
3. மேற்பார்வையாளர்
4.உதவி முகாமையாளர்
5. முகாமையாளர்
மேற்குறிப்பிட்ட பதவிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.கல்வித் தகைமை O/L அல்லது A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
(2386)
தொடர்புகளுக்கு:- 0765233519, 0773260979

கல்லூரி நிர்வாக உத்தியோகத்தர்
யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் சர்வதேச தரத்திலான கற்கை நெறிகளை வழங்கும் கல்லூரிக்கு அனைத்து பொறுப்புக்களையும் ஒருங்கமைக்கக்கூடிய முழுநேர நிர்வாக உத்தியோகத்தர் தகைமைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
ஆங்கிலத்தில் புலமை, பல்கலைக்கழக கல்வி, வேலை அனுபவம் என்பன அடிப்படை தகுதிகளாக கருதப்படும்.
சம்பளம் - 30,000/=
(c-9340)
தொடர்புகளுக்கு:- 0768226243

சிறுநீரகம் தேவை
O,B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(1930)
0762399874

போட்டிப் பரீட்சை மாலை நேர வகுப்புகள்
SLTES, Register, LL.B, MA பரீட்சைகளுக்கு
செவ், புதன், வியா
4.45pm-6.45pm
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு. யாழ்நகர்.
T.p 0766883394

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய் • மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(C-2050)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(9946)

CCTV Technician Course
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி
(c-9333)
Approved Certificate
30th Batch : 07 Mar 2020
Mobile Phone Repairing Course
29.02.2020 முதல் ஆரம்பம்
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள்கோவில் அருகாமையில)
021-7306000, 077-6656778

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-9293)

மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை
5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது
5kg க்கு மேல் 1கிலோவுக்கான கட்டணம்
பிரான்ஸ்- ஜேர்மனி- டென்மார்க்- கொலன்ட்- பெல்ஜியம்- ரூ.750
இத்தாலி- சுவீடன்- ரூ.850 லண்டன் -ரூ.650 சுவிஸ்- ரூ.1000
கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்
டிஸ்ரிவி(DishTv), மின்சாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும்
யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும், பொதிகளை அனுப்பிடவும்
எமது பொதிகள் சேவை நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை ..யாழ் நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது
976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500
72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999
பிரதான வீதி சங்கானை 075 3305500
355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999
முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார்
சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.